மாலெ தீப்பொறி

MALAE THEEPORI



2023 செப்டம்பர் 16-30 தொகுதி 22 இதழ் 4 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200

# ‘மணிப்பூர் கொடூரத்தை மன்னிக்கமாட்டோம் மோடி ஆட்சியை விரட்டும் வரை ஓய மாட்டோம்’

## இகக(மாலெ) சிறப்பு மாநாடு - நாகர்கோயில்






# ஏழு இடைத்தேர்தல்களும் சுட்டிக்காட்டும் செய்தி

செப்டம்பர் 5 அன்று நடைபெற்ற இடைத்தேர்தல் முடிவுகள் வெளிவந்துள்ளன. ஒட்டுமொத்த முடிவுகளையும் பார்த்த மாத்திரத்தில், மாற்றம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை எனலாம். தேசிய ஜனநாயகக் கூட்டணி 3 இடங்களிலும், இந்தியா கூட்டணி 4 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. ஆனால், கூர்ந்து கவனித்தால் அடிமட்டத்தில் நிறைய மாற்றங்கள் நடந்திருப்பது வெளிப்படுகிறது. மக்களவைக்கு அதிக உறுப்பினர்களை அனுப்பும் உத்தரப்பிரதேசத்தில் மிகப்பெரிய மாற்றம் நிகழ்ந்திருக்கிறது.கோசி தொகுதி இடைத்தேர்தல் (சட்டமன்ற உறுப்பினரின்) மரணத்தின் காரணமாக நடைபெறவில்லை. மாறாக, அவர் கட்சி தாவியதன் காரணமாக நடைபெற்றது. சமாஜ்வாதி கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர் பாஜகவுக்கு கட்சி தாவி பாஜகவின் வேட்பாளராக மறு தேர்தலை எதிர்கொண்டார். மோடி–ஷா–யோகி, இரட்டை எஞ்சின் ஆட்சி அவருக்குப் பின்னால் தனது முழு பலத்தையும் செலுத்தியது. பாஜகவை தோற்கடித்ததன் மூலம் கோசி மக்கள் அனைத்து அதிகாரமும் படைத்த யோகி ஆட்சியை தோற்கடித்திருக்கிறார்கள். மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் பெற்ற வெற்றியானது இந்த செய்தியை இன்னும் உரக்கச் சொல்கிறது.

அதேபோல் ஜார்க்கண்ட் மாநிலத்தின் டும்ரி தொகுதியும் கடும் போட்டியை எதிர்கொண்ட தொகுதியாகும். 2019 தேர்தலில் பாஜகவும் அனைத்து ஜார்க்கண்ட் மாணவர் சங்கமும் (AJSU) தனித்தனியே போட்டியிட்டதால் அப்போது போட்டியிட்ட ஜே எம் எம் கட்சியின் மக்கள் செல்வாக்கு மிக்க ஜகன்நாத் மகதோ எளிதாக வெற்றி பெற முடிந்தது. இந்த முறை அனைத்து ஜார்க்கண்ட் மாணவர் அமைப்புக்கு பாஜக தனது முழு ஆதரவை தெரிவித்திருந்தது. கூடுதலாக இம்முறை பாபுலால் மாரன்டி தலைமையிலான முந்தைய ஜேவிஎம் கட்சியின் ஆதரவையும் பாஜக பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. சூழலின் தேவை கருதி, இகக(மாலெ)(விடுதலை)யின் கிரிடி மாவட்ட அமைப்பு ஜேஎம்எம்–க்கு ஆதரவாக ஆற்றல்மிக்க தேர்தல் பிரச்சாரத்தில் குதித்திருந்தது. பாஜக ஏஜேஎஸ்யு கூட்டின் தோல்வி, ஜார்க்கண்டின் இந்தியா முகாமுக்கும் வலுச் சேர்க்கிற முக்கிய வெற்றியாகும்.

அதேபோல் மேற்கு வங்கத்தின் துப்குரி இடைத்தேர்தலில் மிக நெருக்கமான போட்டியில் பாஜகவை திரிணாமூல் காங்கிரஸ் தோற்கடித்ததும் குறிப்பிடத்தக்கதாகும். 2021 தேர்தலில் வடக்கு வங்கம் முழுவதும் பாஜக அனைத்து இடங்களிலும் வெற்றி அலையை பெற்றிருந்தது. அந்த அலை இப்போது பின்னோக்கித் திரும்பி இருப்பதாகத் தெரிகிறது.

**திபங்கர்**
**பொதுச் செயலாளர்**
**இகக(மாலெ) விடுதலை**

## விஸ்வகர்மா திட்டம்: “சாதி அமைப்பு மறு உறுதி செய்யப்படும்”

சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீடு வரம்புக்குட்பட்ட அளவிலேனும், பிரதிநிதித்துவத்தை அதிகரித்தது. சமூக முன்நகர்வை ஊக்கப்படுத்தியது. சாதி அடிப்படையில் கடன் வழங்குவதும் பயிற்சி அளிக்கும் திட்டங்களும் சாதிகளை மரபார்ந்த தொழில்களிலேயே கட்டிப்போட்டு விடும். அதன் மூலம் சாதிய அமைப்பு மறு உறுதி செய்யப்படும். அதிகரித்த அளவிலான வேலைகளும் விரிவாக்கப்பட்ட இட ஒதுக்கீடுமே இப்போதைய தேவை.

**திபங்கர்**
**பொதுச் செயலாளர்**
**இகக(மாலெ) விடுதலை**

2023 செப் 16-30

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 22 இதழ் 4

**உள்ளே**


| | |
|---|---|
| செப்டம்பர் அழைப்பு | 4 |
| ஒரே நாடு ஒரே தேர்தல் | 7 |
| தோழர் திபங்கர் பேட்டி | 10 |
| புதிய ஓய்வூதிய திட்டம் வேண்டாம் | 13 |
| மக்கள் சந்திப்பு பரப்புரைப் பயணம் | 17 |
| நாகர்கோயில் சிறப்பு மாநாடு | 20 |


**ஆசிரியர்**

**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**

**பாலசுந்தரம்**

**பழ.ஆசைத்தம்பி**

**அ.சந்திரமோகன்**

**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**

**சொ.இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு**

**1/10, 11ஆவது தெரு,**
**கருணாநிதி நகர்,**
**அயனாவரம்,**
**சென்னை – 600023**

**நிர்வாக அலுவலகம்**

**3/254பி, ஜீவா தெரு,**
**வண்டலூர்**
**சென்னை – 600048**

**தொலைபேசி: 9443507067**
**9840340741**

malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com

**தலையங்கம்**

# சங்கிகள்- சர்ச்சைகள்- சனாதனம்!

பெருமாள்முருகன்-அர்த்தநாரி, வைரமுத்து-ஆழ்வார், கருப்பர் கூட்டம்-கந்தசஷ்டிகவசம் வரிசையில் இப்போது உதயநிதி ஸ்டாலின்-சனாதனம். ஆர்எஸ்எஸ்-பாஜக சங்கிகளுக்கு அரசியல் செய்ய எப்போதும் தேவை ஏதாவது ஒரு சர்ச்சை. இருப்பதை எடுத்துச் சொன்னால் எகிறிக் குதிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். பெருமாள்முருகன், வைரமுத்து, கருப்பர் கூட்டம் எல்லாரும் இருப்பதை எடுத்துக் கூறினார்கள். உதயநிதி ஸ்டாலின் இருப்பதை எடுத்துச் சொன்னதோடு, இருக்கும் அந்த இழிவுகள் நிரந்தரமாக ஒழிக்கப்பட வேண்டும் என்றார். அதுவும் சிவப்பு, கருப்பு, நீலம் புடைசூழ. தமிழ்நாட்டில் எதையாவது கிளப்பி இந்து உணர்ச்சியைத் தூண்டிவிட்டு, பிடித்துப் போட்டிருக்கும் அடிமைகளையும் கைக்குள் போட்டுக் கொண்டு காலூன்றத் துடிக்கின்றது காவிக் கூட்டம். சனாதனச் சர்ச்சையானது தற்போது தமிழ்நாடு தாண்டியும் கொஞ்சம் கூடுதலாக ஒலிப்பதற்குக் காரணம் இது தேர்தல் நேரம். உ.பி. போலிச் சாமியார் (அவர் உண்மையான சாமியார் அல்ல என்று அண்ணாமலையே ஒப்புக் கொண்டுள்ளார்), உதயநிதியின் தலையைச் சீவ கத்தினார் என்றால், பிரதமர் மோடி, ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா, நீர் வளத்துறை அமைச்சர் கஜேந்திரசிங், தெலுங்கானா ஆளுநர் தமிழிசை, தமிழக ஆளுநர் ரவி (இவர் எப்போதும் பேசிக் கொண்டிருக்கிறார்), பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை என ஆட்சி, அதிகாரத்தில் இருப்பவர்களும் சனாதனத்தை நிலை நிறுத்தப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பிரதமர் மோடி, 'இந்தியா' கூட்டணியில் உள்ளவர்கள் சனாதன தர்மத்தை அழிக்கப்பார்க்கிறார்கள் என்றும் நாட்டை ஆயிரம் ஆண்டு அடிமைத் தனத்திற்கு இட்டுச் செல்கிறார்கள் என்றும் பேசுகிறார். சனாதனம்தான் இந்து தர்மம், சனாதனத்தை எதிர்ப்பவர்கள் வன்முறையாளர்கள், அது வாக்கு மூலமான வன்முறையாக இருந்தாலும் சரி, செயல் மூலமாக இருந்தாலும் சரி நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று மறைமுகமாக சங்கிகளுக்கு உசுப்பேற்றுகிறார். ராஜஸ்தானில் டெய்லர் கொல்லப்பட்டாரே, இந்துக்கள் நாங்கள் பார்த்துக் கொண்டு அமைதியாகத்தானே இருந்தோம், அதான் சனாதன தர்மம் என்கிறார். டெய்லரைக் கொன்றவர்கள் சங்கிகள்தான் என்பது வெட்டவெளிச்சமானவுடன் அதை வைத்து கலவரம் நடத்த நினைத்த சங்கிகள் சத்தம் காட்டவில்லை என்பதுதானே உண்மை. தமிழிசை அவர்கள் தன் முன்னோர் வீட்டுப் பெண்கள் மார்பை மூட முடியாமல் முலை வரி கட்டியதை, அதற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த தோள் சீலைப் போராட்டத்தை, வசதியாக மறைத்துவிட்டு, சனாதனம் எக்காலத்திற்குரிய நிலையான அறம் என்று பேசுகிறார். அப்போதிருந்த பார்த்தால் தீட்டு, தொட்டால் பாவம் மீண்டும் வர வேண்டும் என்று தமிழிசை விரும்புகிறாரா? அண்ணாமலை, 'நான் கருவறைக்குள் சென்று பூசாரி வேலையை பார்க்கமுடியாது, நான் பார்க்கும் விவசாயி வேலையை அவர் பார்க்க முடியாது. இதுதான் இந்து தர்மம், சனாதன தர்மம்' என்கிறார். அந்த நிலையான சனாதனம் இன்றும் தொடர்ந்திருந்தால், அண்ணாமலை ஐபிஎஸ் ஆகியிருக்கவும் முடியாது, அவர் அறிஞர் அண்ணாவைப் பற்றி தவறான கருத்து சொன்னதைக் கண்டித்த அதிமுககாரர்களைப் பார்த்து 'இது பத்து ஆண்டுகள் துப்பாக்கி புடிச்ச கை' என்று சினிமா போல் மிரட்டிக் கொண்டிருக்கவும் முடியாது. 'ஆங்கிலேயர் வந்தாரோ நாமெல்லாம் பிழைத்தோம்' என்று, ஆங்கிலேயர்கள்தான் 'இந்து' என்கிற பெயரையே கொடுத்தார்கள் என்று காஞ்சி பெரிய சங்கரச்சாரி சந்திரசேகரேந்திரர் குறிப்பிட்டார். சனாதனம் என்றால், பார்ப்பனீய அடிமை முறை, சாதிய ஒடுக்குமுறை, பெண் அடிமைத்தனம், குலத் தொழில் செய்தல். இதை எதிர்ப்பவர்களைத் தான் ஆயிரம் ஆண்டு அடிமை முறைக்கு இட்டுச் செல்கிறார்கள் என்று மோடி தலைகீழாகப் பேசுகிறார். விஸ்கர்மா யோஜனா திட்டத்தின் மூலம் 2000 ஆண்டுகளுக்கு முந்தைய குலத் தொழில் முறையை, சாதிய அடுக்குமுறையை நிலை நிறுத்தப்பார்க்கும் மோடி. திருநெல்வேலி திசையன்விளையில் அருந்ததிய சமூக முத்தையா, நாடார் சமூகப் பெண்ணை காதலித்ததால் கொலை செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள். அக் கொலையில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளவர்களோ பட்டியல் சமூகத்தினர். இதற்குப் பின்னால் காக்கிக்குள் இருக்கும் காவி இருக்கிறது. இந்தக் காவிக் கூட்டத்தையும் சனாதனத்தையும் ஒழிப்பதில் உறுதியுடன் ஒன்றுபட்டுச் செயல்படுவதுதான் இன்றைய காலத்தின் கட்டாயம். ❑

## செப்டம்பர் அழைப்பு:

# ஜனநாயகம் காக்க, இந்தியாவைக் காக்க; பரந்த எதிரணி ஒற்றுமையை வலுப்படுத்த உறுதியேற்போம்!

**பாலசுந்தரம்**

நாட்டில், ஜனநாயகத்தை காப்பதற்கான போராட்டம் தீவிரமடைந்து வருகிறது. மேலும் தீவிரப்படுத்த வேண்டியிருக்கிறது. நாட்டின் ஜனநாயகத்தை காப்பதற்கான போராட்டம் தீவிரமடைந்து வருகிறது. இன்னும் தீவிரப்படுத்த வேண்டியிருக்கிறது. அரசமைப்புச் சட்டமும் நாடாளுமன்ற ஆட்சிமுறையும் கடும் அச்சுறுத்தலுக்குள்ளாகிக் கொண்டிருக்கும் நிலையில் ஜனநாயகத்துக்கான போராட்டம் நாட்டின் முதல் முன்னுரிமையான போராட்ட மாகும். அடித்தள மக்கள் தொடங்கி அனைத்துப் பகுதி மக்களின் முதன்மைப் போராட்டமாகும். தமிழ்நாட்டிலும் இந்தப் போராட்டம் ஊக்கம் பெற்று வருகிறது. நாட்டு விடுதலைப் போராட்டத்துக்கு சற்றும் குறையாத இந்தப் போராட்டத்தில் கம்யூனிஸ்ட்கள் முன்களப் பணியாளர்களாக களமாடி வருகிறார்கள்.

தமிழ்நாட்டின் புரட்சிகர இடதுசாரி தோழர்கள் அப்பு, சந்திரகுமார், சந்திரசேகர், சுப்பு, மச்சக்காளை, பாலன் உள்ளிட்ட தோழர்கள், இந்திய சமூகத்தை ஜனநாயகப்படுத்தும் போராட் டத்தில் முன்வரிசையில் இருந்தவர்கள். அதனால் களப்பலியானவர்கள். சுதந்திர இந்தியாவில், உழைக்கும் மக்களது விருப்பங்களும் கனவு களும் நிறைவேற்றப்படாத நிலையில், இந்தியாவை ஜனநாயகப்படுத்தும் போராட் டங்கள் ஒரு எல்லைக்குள் கட்டுப்படுத்தப் பட்டபோது, வெடித்துக் கிளம்பியது நக்சல்பாரி. இந்திய சமூகத்தை புரட்சிகரமான முறையில் ஜனநாயகப்படுத்தும் போராட்டத்தில் இகக (மாலெ) களமிறங்கியது. இந்தப் போராட்டத்தில் உழைக்கும் மக்களை அணிதிரட்டிய போராட்டங் களில் ஆதிக்க சக்திகள், ஆட்சியாளர்களின் ஆறாக் கோபத்தை தேடிக்கொண்டார்கள் புரட்சிகர கம்யூனிஸ்ட்கள். உழைக்கும் மக்களது ஜனநாயகத்துக்காகப் போராடிய கம்யூனிஸ்ட்கள் சதித்தனமான முறையில் கொல்லப்பட்டார்கள். இகக(மாலெ)வின் முதல் மாநிலச் செயலாளர் அப்பு ரகசியமாக கொல்லப்பட்டார். ஆட்சி யாளர்களும் காவலதிகாரிகளும் அவரது சடலத்தைக்கூட காணாமலடித்து விட்டனர்.

இந்த தியாகிகளது நினைவாக, தோழர்கள் சந்திரசேகர்–சந்திரகுமார் கொல்லப்பட்ட செப்டம்பர் 2 முதல் தோழர் சுப்பு கொல்லப்பட்ட செப்டம்பர் 13 வரை, மக்கள் சந்திப்பு பரப்புரை இயக்கம் நடத்தப்பட்டது. இந்த பரப்புரை இயக்கத்தில், “மோடி ஆட்சியை வெளியேற்று வோம், ஜனநாயகம் காப்போம்; இந்தியாவைக் காப்போம்” எனும் முழக்கம், தமிழ்நாட்டின் கிராமப்புற, நகர்ப்புற பகுதிகளில் சக்திவாய்ந்த வகையில் எதிரொலித்தது. இகக(மாலெ), அவிகிதொச நடத்திய இந்த பரப்புரை இயக்கம், தேசத்தின் ஜனநாயகத்தை காக்க, இந்தியாவைக் காக்க மக்களுக்கு அழைப்பு விடுத்தது.

தோழர்கள் சந்திரகுமாரும் சந்திரசேகரும் தஞ்சையின் தலித், உழைக்கும் மக்களின் நிலம், கூலி, கவுரவம், ஜனநாயகத்துக்கான போராட் டத்தை முன்னெடுத்துச் சென்றவர்கள். தோழர் சந்திரகுமார், பள்ளி ஆசிரியராக பணியாற்றிக் கொண்டே, சொற்பக் கூலிக்கு வேலை செய்த விவசாய கூலித் தொழிலாளரை அணிதிரட்டி போராடச் செய்து, திருப்பனந்தாள் ஒன்றியத் திலுள்ள பல கிராமங்களில் உள்ள தொழிலா ளர்கள் அதிக கூலி பெறச் செய்தார். மாணவர் களுக்கு சுயமரியாதை உணர்வூட்டி தலை நிமிரச் செய்தார். நிலவுடமை ஆதிக்கச் சக்திகளின் அதிகாரத்தை தகர்க்கும் போராட்டத்தில் முன்னணிப் போராளிகளாக இருந்தனர் சந்திர குமாரும் சந்திரசேகரும்.

தோழர் சுப்பு, ஆதிக்க இடைநிலைச் சாதி நிலவுடைமை சக்திகளின் அதிகாரத்தைக் கண்டு பொங்கி எழுந்தவர். இந்தப் பகுதிகளில், கோவில்கள் ஆதிக்க அதிகாரக் குறியீடுகளாக இருந்தன. உரிமைகள் மறுக்கப்பட்டன; நியாயமான விருப்பங்கள் நசுக்கப்பட்டன. உஞ்சனையில் புரவி எடுக்கும் உரிமைக்கு குரல் கொடுத்த ஐவர் கொல்லப்பட்டனர். இந்த பின்புலத்தில் இவற்றை எதிர்த்து கலகம் புரிந்தவர் தோழர் சுப்பு. மாலெ கட்சியின் வழிகாட்டு தலின்படி, தலித் உழைக்கும் மக்களின் கோவில்

நுழைவுப் போராட்டத்தை தலைமை தாங்கி வெற்றிகரமாக நடத்திக் காட்டியவர். இவ்வாறு சமத்துவமற்ற, ஜனநாயகமற்ற சமூகத்தில் ஜனநாயகப்படுத்தும் போராட்டத்தை முன்னெடுத் தவர்கள் புரட்சிகர கம்யூனிஸ்ட்கள். செப்டம்பர் 30ல் உயிர்நீத்த தோழர் சீனிவாசராவ், பண்ணையடிமைகளை, ஏழை விவசாயிகளை வெற்றிகரமாக அணிதிரட்டியவர். இதன் தொடர்ச்சியாக, போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற இகக(மாலெ) மாநிலச் செயலாளர் அப்பு, மற்றொரு மாநிலச் செயலாளர் மச்சக்காளை இதேபோல் வடார்க்காடு, தருமபுரி மாவட்டங் களில் புரட்சிகர போராட்டத்தை நடத்திய தோழர் பாலன் உள்ளிட்டவர்களின் தொடர்ச்சியாகத்தான் தோழர்கள் சந்திரசேகர், சந்திரகுமார், சுப்பு களமாடினர். உழைக்கும் மக்களது ஜனநாயகத் துக்காக கிராமப்புற வேர்க்கால் தளங்களில் போராடினர்.

1984 செப்டம்பர் 2 அன்று சென்னை கடற்கரையில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதிமுக ஆட்சியின் போது நடைபெற்ற அந்த பொதுக்கூட்டத்தை திமுக, தெலுங்கு தேசம் உள்ளிட்ட சில கட்சிகள் நடத்தின. ஆந்திரா மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட என்டிஆர் தலைமையிலான தெலுங்கு தேசம் ஆட்சியை ஒன்றிய காங்கிரஸ் ஆட்சி கலைத்ததை எதிர்த்து அந்த மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த ஆட்சிக் கலைப்பை இகக(மாலெ) 'ஜனநாயகப் படுகொலை'யென கண்டித்தது. அதே நாளில், கிராமங்களில் உழைக்கும் மக்களின் ஜனநாயக விருப்பங்களை இயக்கமாக்கிய தலைவர்கள் சந்திரசேகர், சந்திரகுமார் மணலூரில் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். கட்சியின் வேறு பல தலைவர்களுக்கும் கொடும்காயங்கள். அந்த நாளில் ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டது.

1994ல், "ஊழல், சர்வாதிகார ஜெ. ஆட்சியை வெளியேற்றுவோம்" என்று முழங்கிய மக்கள் பேரணியை சென்னையில் இகக(மாலெ) நடத்தியது. தோழர் வினோத் மிஸ்ரா கலந்து கொண்ட அந்த மக்கள் திரள் பேரணியில், சிவகங்கை மாவட்டத்தின் பெருந்திரள் மக்களுக்கு தலைமையேற்று தோழர் சுப்பு கலந்து கொண்டார். அந்த ஆண்டு செப்டம்பர் 13ம் நாளில்தான், ஆதிக்க சக்திகளையும் ஆட்சியாளர்களையும் ஒருசேர கோபமடையச் செய்த தோழர் சுப்பு கொல்லப்பட்டார். வெவ்வேறு கட்சிகளில் இருந்த சாதி ஆதிக்க, புதுப் பணக்கார சக்திகள், ஜெ ஆட்சியில்தான் அதிதீவிர உக்கிரமடைந்து தலைவிரித்தாடின. அந்த சக்திகளின் நரித்தனமான பிரிவொன்றுதான் சுப்பு படுகொலையை நடத்தியது. ஜெ ஆட்சியில்தான் சாதி ஆதிக்க ஒடுக்குமுறை சக்திகள் அதி தீவிர உச்சம் பெற்றன. கொடியங் குளம் தொடங்கி பரமக்குடி வரை தலித்துகள் மீதான கொடூரமான ஒடுக்குமுறைகள் பேயாட்டம் ஆடின. எனவேதான் அதிமுக வெற்றி பெற்ற போது, "பார்ப்பனியத்தின் மறுவருகை" என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) அறிவித்தது.

இன்று, சாதி ஆதிக்க சக்திகள், வருணாசிரம சனாதன ஆணாதிக்க பார்ப்பனிய சக்திகள் (அனைத்து விதமான பிற்போக்கு சக்திகள்) முதல் கார்ப்பரேட் சக்திகள் வரை அவற்றின் உருண்டு திரண்ட தலைமை சக்தியான ஆர்எஸ்எஸ் வழி நடத்தும் பாஜக ஆட்சி இருக்கிறது. இது அனைத்து விதமான தேசிய, கம்யூனிச, திராவிட, பெரியாரிய, அம்பேத்கரிய முற்போக்கு இயக்கங் களுக்கும் சக்திகளுக்கும் எதிரானது மட்டுமின்றி, பாசிச சர்வாதிகாரமாக ஓங்கி வளர்ந்திருக்கிறது. இதை வீழ்த்துவது மேற்கண்ட அனைத்து முற்போக்கு சக்திகளின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

செப்டம்பர் மாதம், புரட்சிகர இடது இயக்கத்துக்கு மட்டுமின்றி நூறாண்டு கண்ட திராவிட இயக்கத்துக்கும் மிக முக்கியமானதொரு மாதம். செப்டம்பர் 15 அண்ணா பிறந்தநாள், 16 திமுக தோற்றுவிக்கப்பட்ட நாள், 17 பெரியார் பிறந்தநாள். திராவிட இயக்கம் என்பது நீதிக் கட்சி துவக்கம் முதல், தற்போதுள்ள பெரியாரிய குழுக்கள், அமைப்புகள், ஆளுமைகள், திமுக உள்ளிட்ட பல பிரிவுகளைக் கொண்டது. மூன்று பிரிவாக துண்டுபட்டுள்ள அதிமுக குழுக்கள், ஓரிரு திராவிட (இட ஒதுக்கீடு, இருமொழிக் கொள்கை) அடையாளங்களைக் கொண்டிருப் பினும் இவை திராவிட இயக்க அடையாள வரையறையிலிருந்து தள்ளி வைத்தே அறியப்படு கிறது. அஇஅதிமுக பாஜகவுடன் கூட்டணி கொண்டுள்ள நிலையில் அதன் திராவிட இயக்க அடையாளம் மேலும் சரிந்து சிதைந்து போயுள்ளது. கருத்தியல், அரசியல் ரீதியாக திமுகவை முதன்மை சக்தியாகக் கொண்ட பல பிரிவுகளை, அவற்றின் பின் இயங்கும் ஆளுமைகளை, குழுக்களையே திராவிட இயக்கம் எனக் கூறலாம். திமுகவின் "திராவிட மாடல் ஆட்சி" என்ற சித்தரிப்பும் இதை

விளக்குவதாகவே உள்ளது.

பாஜக, இந்திய அரசியலில் ஆளுமை பெற்று ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் பின்னணியில் தமிழ்நாட்டிலும் காலூன்றுவதற்காக அசுர முயற்சிகளில் இறங்கியுள்ள நிலையில், திராவிட அரசியல் வலதுசாரி சக்திகளிடமிருந்து வலுவான சவால்களை எதிர்கொள்கிறது. எனவே, தன்னை மறுவரையறை செய்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. பாஜகவுடன் கூட்டணி ஏற்படுத்திக்கொண்டு ஒன்றிய அதிகாரத்திலும் பங்கு பெற்ற கருணாநிதி தலைமையிலிருந்த திமுகவின் வளர்ந்துவரும் உதயநிதி ஸ்டாலின் ஒரே நாளில் சனாதன எதிர்ப்புக் குரலாக, திருஉருவாக எழுந்துள்ளதை சுட்டிக் காட்டலாம். இதை வாய்ப்பாக எடுத்துக்கொண்டு 'இந்தியா' கூட்டணியில் விரிசலைக் கொண்டு வர பாரதப் பிரதமரே முயற்சித்தாலும் இதில் ஊன்றி நிற்பதை வரவேற்கத்தக்க நிலைப்பாடாக எடுத்துக் கொள்ளலாம். உதயநிதியின் சனாதன எதிர்ப்பு பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவிக்காத, அமைச்சர் சேகர்பாபு பதவி விலக வேண்டுமென்று பாஜக போராட்டம் நடத்தியுள்ள பின்னணியில், 1000 கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தியதை, "இறைநம்பிக்கையாளரும் போற்றும் திமுக அரசு" என்று முதலமைச்சர் ஸ்டாலின் பூரிப்புடன் பேசியுள்ளதையும் கவனத்தில் கொள்ளலாம். கட்சி வேறு, ஆட்சி வேறு என்ற அணுகுமுறையின் தொடர்ச்சியாகவே எடுத்துக் கொள்ளலாம்.

செப்டம்பர் 11ல் தியாகியான இமானுவேல் சேகரனுக்கு அவரது நினைவிடத்தில், அரசு சார்பில் மணிமண்டபம் அமைக்கும் தமிழ்நாடு அரசின் முடிவு வரவேற்கத்தக்கது. என்றாலும் வேங்கைவயல் குற்றவாளிகள் இன்னும் கைது செய்யப்படாதது ஏன் என்று கேள்வியை எழுப்பாமல் இருக்கமுடியாது. அனைத்துப் பள்ளிகளிலும் காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டிருப்பது பாராட்டுக்குரியதுதான். அதேவேளை தலித் சமையலர்களை முன்னிறுத்தி உணவைப் புறக்கணிக்கிற, கடும் கண்டனத்துக்குரிய செயல்களைப் பற்றி முதலமைச்சர் கண்டனம் தெரிவிக்காதது பற்றி சுட்டிக் காட்டாமல் இருக்கமுடியாது. வரவேற்கத்தக்க பல சமூகக் கொள்கைகளும் சமூகங்களுக்கு எதிரான பொருளாதார கொள்கைகளும் சேர்ந்து செல்லமுடியாது என்பதை சுட்டிக்காட்டாமலும் இருக்க முடியாது.

காங்கிரஸ் அறிவித்த அவசரநிலை பிரகடனத்தால் ஆட்சியை இழந்ததுதான் திமுக. அவசரநிலை கால சித்தரவதைகளை அனுபவித்தவர்கள் ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள். எம்ஜிஆரை எதிர்கொள்ளும் அவசரத்தில் ஏற்கனவே காங்கிரசுடன் கைகோர்க்கும் அரசியல் முடிவை திமுக எடுத்திருந்தாலும் இன்று இந்தியாவில், அறிவிக்கப்படாத நிரந்தர அவசரநிலையைக் கொண்டுவந்துள்ள பாஜகவை ஆட்சியிலிருந்து அப்புறப்படுத்தி, "நாட்டைக் காக்கும் ஜனநாயகத்தைக் காக்கும்" போராட்டத்தில் காங்கிரசோடு கரம் சேர்க்கும் முடிவுக்கு புதிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

"நாடு இருந்தால் தான் வீடு கேட்க முடியும்; வீடு இருந்தால்தான் ஓடு மாற்ற முடியும்" என்று பேரறிஞர் அண்ணா சொன்னார். ஜனநாயக விழுமியங்கள் கொண்ட அண்ணா, இந்தியா பாகிஸ்தான் போரின் போது கூறியிருந்த மேற்கூறிய பிரபலமான கருத்து, இன்று நாட்டில் நிலவும் முற்றிலும் வேறுபட்ட அரசியல் சூழலில் தமிழ்நாட்டின் கூட்டுணர்வில் வெளிப்படுவதாகவே கருதலாம். மதச் சார்பின்மை, சமூக நீதி, கூட்டாட்சி, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம், அரசமைப்புச் சட்டத்தின் பாதுகாப்பு இவற்றை ஒழித்துக்கட்ட முனையும் பாஜகவை ஆட்சியிலிருந்து அப்புறப்படுத்த வேண்டிய அரசியல் பின்னணியில், மேற்கூறிய அரசியல் கொள்கைகளில் தீவிர அக்கறை கொண்டுள்ள கட்சிகளுடன் கரம் கோர்ப்பது அவசியம். பாசிச பாஜகவையும் அதன் அரசியல் சதித்திட்டங்களைத் தோற்கடிப்பதும் இந்தியாவின் ஜனநாயகப் போரில் ஒரு முக்கியமான கட்டம். இந்த கட்டத்தில், புரட்சிகர ஜனநாயக சக்திகள், திமுக உள்ளிட்ட விரிவான பாஜக எதிர்ப்பு அரசியல் சக்திகளுடன் சேர்ந்து போராடுவது மிகவும் முக்கியம். உழைக்கும் மக்களது ஜனநாயகத்துக்கும் இந்தியாவின் முற்றூடான ஜனநாயகப்படுத்தலுக்கும் போராடும் புரட்சிகர இடதுகளுக்கு இந்த இலக்கு நோக்கி முன்னேற ஜனநாயகம் காக்கப்படுவது, இந்தியா பாதுகாக்கப்படுவது, அரசமைப்பு சட்டம் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம்.

இந்த லட்சிய நோக்கினடிப்படையில், இடதுசாரிகளுக்கும், புரட்சிகர இடதுசாரிகளுக்கும் திராவிட இயக்கத்துக்கும் முக்கியமான செப்டம்பர் மாதம் விடுக்கும் அழைப்பு, பாஜக எதிர்ப்புக்கான பரந்த எதிர்க்கட்சி ஒற்றுமையை வலுப்படுத்த உறுதி ஏற்பதுதான். ❑

# 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' ஏன் இந்த அதீத விரக்தி?

தற்போது 'இந்தியா' என்று சுருக்கமாக அழைக்கப்படும் ஒன்றுபட்ட எதிர்க்கட்சிகளின் மூன்றாவது கூட்டத்தில் கலந்து கொள்ள அதன் பிரதிநிதிகள் மும்பையில் கூடியிருந்த சமயத்தில், மோடி அரசாங்கம் செப்டம்பர் 18 முதல் 22 வரை நாடாளுமன்றத்தின் வழக்கத்திற்கு மாறான ஒரு கூட்டத்திற்கான அறிவிப்பை வெளியிட்டது. சமீபத்திய நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் முடிவடைந்த உடனேயே, அதையொட்டி இந்த சிறப்புக் கூட்டத் தொடர் அறிவிக்கப்பட்ட விதம், அதுவும் எதிர்க்கட்சிகளுடன் கலந்தாலோசிக்காமலும் முற்றிலும் ஒருதலைப்பட்சமாக செயல்பட்டிருப்பதும், ஏற்றுக் கொள்ளப்பட்ட நாடாளுமன்ற விதிமுறைகளை வெட்கக்கேடான முறையில் மீறியிருப்பதும், அரசாங்கத்திற்கு ஏதோ உள்நோக்கம் உள்ளது என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது. இந்த அய்ந்து நாள் அமர்வில் தினசரி கேள்வி நேரமோ அல்லது வழக்கமான பூஜ்ஜிய நேரமோ (zero hour) இருக்காது. மேலும் இதுவரை பகிரங்கப்படுத்தப்படாத ஒரு நிகழ்ச்சி நிரலை தனித்துவமாக நடத்துவதற்கு மட்டுமே இந்தக் கூட்டத் தொடர் பயன்படுத்தப்படும். ஒரு ஜனநாயகக் குடியரசின் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்தை பேரரசரின் அரசவையாக மோடி அரசாங்கம் நாளுக்கு நாள் மாற்றி வருகிறது.

மற்றொரு திடீர் நடவடிக்கையாக, நாடாளுமன்றம், மாநில சட்டமன்றங்கள், கிராமப்புற, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழுவை அமைப்பதாக மோடி அரசு அறிவித்துள்ளது. அரசமைப்புச் சட்ட ரீதியாக சந்தேகத்திற்குரிய, அரசியல் ரீதியாக சர்ச்சைக்குரிய ஒரு விஷயம் குறித்துப் பரிந்துரை செய்வதற்காக அமைக்கப்பட்ட ஒரு குழுவின் தலைவராக முன்னாள் குடியரசுத் தலைவரை நியமித்திருப்பது, அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உணர்வையும் கட்டமைப்பையும் அப்பட்டமாக மீறும் வகையில் தனது அரசியல் நிகழ்ச்சி நிரலை திணிக்க முற்படுவது, மோடி அரசாங்கத்தின் விரக்தியை வெளிப்படுத்துகிறது. இந்தக் குழுவில் எதிர்க்கட்சியில் இருந்து மக்களவை காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி என்ற ஒரே ஒரு பிரதிநிதி மட்டுமே இருந்தார். 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' நிகழ்ச்சி நிரலுக்கு ஒப்புதல் அளிக்க வடிவமைக்கப்பட்ட அதன் சந்தேகத்திற்குரிய உத்தரவையும், மாநிலங்களவையில் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரைத் தவிர்த்து விட்டு, மாநிலங்களவையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரை (அவரும் இப்போது பாஜகவுடன் நெருக்கமாக இருப்பவர்) இக்குழுவில் இணைத்திருப்பதன் மூலம் அதன் பொறுக்கியெடுத்த கலவையையும் கருத்தில் கொண்டு அவர் இக்குழுவில் சேர மறுத்துவிட்டார்.

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' என்பது, சிலகாலமாகவே மோடி அரசாங்கத்திற்கு மிகப் பிடித்தமான நிகழ்ச்சி நிரலாக இருந்து

வருகிறது. சட்ட ஆணையம் முதல் நிதி ஆயோக் வரை, பல அமைப்புகள் ஏற்கனவே இந்த விஷயத்தை ஆய்வு செய்துள்ளன. மேலும், இது தொடர் அரசமைப்புச் சட்டத் திருத்தங்களும், எதிர்க்கட்சிகள், மாநில அரசாங்கங்களை உள்ளடக்கிய பரந்த அளவில் கருத்தொற்றுமையும் தேவைப்படுகிற சூட்சுமமான, சர்ச்சைக்குரிய முன்வைப்பு எனவும் கண்டறிந்தன. எந்தவொரு கருத்தொற்றுமையையும் உருவாக்காமல் இக்கருத்தைத் திணிப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிய தற்போதைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவேத் தெரிகிறது. பாஜக தலைவர்கள், அரசு சார்பு உறுப்பினர்கள், 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' என்ற கருத்தின் அறியப்பட்ட ஆதரவாளர்களால் இந்தக் குழு முழுவதுமாக நிரப்பப்பட்டுள்ளது. அதனால், இந்தக் குழுவின் கருத்து, முடிவு செய்யப்பட்ட ஒன்றாகவே இருக்கப்போகிறது. தேர்தல் பத்திரங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் அரசாங்கம் ஏற்கனவே தேர்தல் நிதியை முற்றிலும் திரைமறைவானதாகவும், கணக்கில் வராதவையாகவும் ஆக்கியுள்ளது. தேர்தல் ஆணையத்தை தேர்வு செய்வது தொடர்பாக முன்மொழியப்பட்ட மசோதா, தேர்தல் ஆணையத்தின் தன்னாட்சி, நடுநிலைமை அனைத்தையும் பறித்து, அதை நிர்வாகத் துறைக்கு (அரசாங்கத்துக்கு) அடிபணியவேச் செய்யும். இப்போது ஒரே நேரத்தில் தேர்தல்கள் என்பதைத் திணிப்பதன் மூலம் மோடி அரசாங்கம் தேர்தல் நடை முறையை மேலும் கேலிக்கூத்தாக்க விரும்புகிறது.

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' கருத்துக்கு ஆதரவாக சொல்லப்படும் அரசாங்கத்தின் அடிப்படையான வாதம் என்னவென்றால், இது செலவைக் குறைத்து, தேர்தல் நடத்தை விதிகளால் விதிக்கப்படும் நிறுத்தி வைப்புகளைத் தவிர்த்து, 'வளர்ச்சி'யின் வேகத்தை விரைவுபடுத்தும் என்பதாகும். இந்த இரண்டு வாதங்களுமே போலியானவை. தேர்தல் செலவுகளில் பெரும்பகுதியை அரசியல் கட்சிகளே ஏற்கின்றன; மேலும், சந்தேகத்திற்குரிய நிதி ஆதாரங்களில் இருந்து தேர்தல் நிதியை வாரி இறைக்கும் பாஜகதான் தேர்தலில் பணபலத்தின் பங்கு அதிகமானதாகிப் போனதற்கு முக்கியக் குற்றவாளியாகும். தேர்தல் நடத்தை விதிகள் (புதிய கொள்கைகள் மற்றும் திட்டங்களின் அறிவிப்பை இது தடுக்கிறது) தேர்தல் நடத்தப்படும் மாநிலங்களை மட்டுமே பாதிக்கிறது. அவை நாடு முழுவதும் வளர்ச்சியை 'நிறுத்தி வைப்பது' இல்லை. பணமதிப்பிழப்பு, நீடித்த முடக்கம் போன்ற தவறான நடவடிக்கைகளால் ஏற்பட்ட நீண்டகால பேரழிவுடன் ஒப்பிடுகையில், தேர்தல்களால் ஏற்படுவதாகக் கூறப்படும் தற்காலிக இடையூறு என்பது ஒன்றுமே இல்லாததாகும்.

1967 ஆம் ஆண்டு வரை இந்தியாவில் நாடாளுமன்றத்திற்கும் மாநில சட்டசபைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்பட்டு வந்ததாகவும் நம்மிடம் கூறப்பட்டது. விஷயம் என்னவென்றால், அத்தகைய நடைமுறைக்கு அரசமைப்புச் சட்ட ரீதியான தேவை எதுவும் இல்லாமலேயே, தற்செயலாக ஒரே நேரத்தில் தேர்தல்கள் நடந்தன. 1967 க்குப் பிறகு பல்வேறு காரணங்களால் இடைக்காலத் தேர்தல்கள் தேவைப்பட்டதால் இந்த சுழற்சி முறை மாறியது. பல அரசாங்கங்கள் தங்கள் பதவிக்காலம் முடிவதற்குள் அதிகாரத்தை இழந்தன; புதிய மாநிலங்கள் உருவாக்கம், பிராந்திய கட்சிகளின் எழுச்சி, கூட்டணி காலகட்டத்தின் வருகை (இது ஒற்றைக் கட்சி ஆதிக்கம் என்ற முந்தைய நிகழ்முறையை மாற்றியது); பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மூன்றாம் அடுக்காக உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்களை நிறுவனமயமாக்கியது; ஆகிய மேற்கூறிய இந்த மூன்று முக்கிய காரணிகளைக் குறிப்பிடலாம். காலத்தை மீண்டும் ஒருமுறை செயற்கையாகப் பின்னுக்குத் தள்ளி அமைத்தாலும் கூட, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களுக்கான மக்களின் உரிமையை மறுத்து, மாநிலங்களை குடியரசுத் தலைவரின் ஆட்சிக்கு அல்லது ஆளுநர்கள் அல்லது துணைநிலை ஆளுனர்களின் ஆட்சிக்கு உட்படுத்துவதன் மூலம் இடைக்காலத் தேர்தல்களுக்கு தடைவிதித்தாலன்றி, இந்த சுழற்சி நிகழ்முறையை தொடர்ந்து நீடித்திருக்கச் செய்ய இயலாது. மிகச் சரியாக, இதுவே 2019 ஆகஸ்ட் 5 முதல் ஜம்மு காஷ்மீர் மக்கள் மீது திணிக்கப்பட்டது. ஆக, 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' சூத்திரம் என்பது, அதிகாரத்தை அதீத மையப்படுத்துதலையும், ஜம்மு காஷ்மீர் மாதிரியை இந்தியா முழுமைக்கும் செயல்படுத்துவதையும் நிறுவனமயமாக்குவதற்கான ஒரு தந்திரமாகவேப் படுகிறது.

மோடி அரசாங்கம் நிரந்தரமாக தேர்தல் செயல்முறையிலேயே உள்ளது என்பதும், தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் தேர்தல் பேரணிகளில் உரையாற்றுவதுதான் நரேந்திர மோடிக்கு எப்போதும் முதன்மையானது என்பதும் அனைவரும் அறிந்ததே. மணிப்பூருக்குச் செல்ல

மோடிக்கு நேரமில்லாத போதும் கூட, தேர்தல் பேரணிகள், சாலைவழி சுற்றுப்பயண நிகழ்ச்சிகள், வாக்குச்சாவடி மட்டத்திலான ஊழியர் மாநாடுகளில் உரையாற்றுவதற்காக, அவர் கர்நாடகாவிலிருந்து மத்தியப் பிரதேசத்திற்கும், மத்தியப் பிரதேசத்திலிருந்து ராஜஸ்தானுக்கும் தாவித்தாவி பயணம் செய்தார். அப்படியிருக்கும் போது, சட்டமன்ற, மக்களவைத் தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்த ஏனிந்த திடீர் அதி அவசரம்? மேலும் மேலும் பல மாநிலங்கள் இந்த (பாஜக) ஆட்சியின் கட்டுப்பாட்டில் இருந்து நழுவி வருவதால், அதிகாரத்தை இழந்து விடுவோம் என்ற பயத்திற்கும் இதற்கும் நிறைய தொடர்பு உள்ளது என்பது தெளிவாகிறது. தனித்தனியாக நடக்கும் தேர்தல்களைக் காட்டிலும் ஒரே நேரத்தில் மக்களவை மற்றும் சட்டமன்றத் தேர்தல்கள் நடந்தால் மத்தியில் ஆளும் கட்சி வெற்றி பெற அதிக வாய்ப்புகள் இருப்பதாக அனுபவப்பூர்வமான சான்றுகள் வெளிப்படையாகத் தெரிவிக்கின்றன. சட்ட மன்றத் தேர்தலை விட, மக்களவை தேர்தலில், 'மோடி காரணி' சிறப்பாக செயல்படுகிறது என்பதும் தெளிவாகிறது. எனவே அமைப்பு முறையை மாற்றுவதன் மூலம் கிடைக்கும் பலனை அறுவடை செய்யவே இந்த விரக்தி பொங்கும் அவசரம்.

நிச்சயமாக, அதிகாரத்தை அதீதமாக மையப் படுத்துகிற, இந்தியாவின் பன்முகக் கலாச்சாரம், பன்மை அரசியல், கூட்டாட்சி கட்டமைப்பு ஆகியவற்றை திட்டமிட்ட ரீதியில் பலவீனப் படுத்துகிற சங்கி-பாஜக வின் திட்டம் தான் இந்த செயல்திட்டத்தை இயக்குகிறது. ஒவ்வொரு தேர்தலுக்கும் அதற்குரிய சூழல் ஒன்று உள்ளது. சங்கி தயாரிப்பான 'தேசிய யதார்த்தம்' என்று அழைக்கப்படுவதன் கூக்குரல் வலுமிக்கதாக மாறினாலன்றி அதன் தாக்கத்திற்கு ஆளாகாமல், பஞ்சாயத்து மற்றும் சட்டமன்றத் தேர்தல்கள் உடனடி உள்ளூர் நிலைமைகளைத்தான் பிரதிபலிக்கும். மோடி அரசாங்கம் அனைத்து தேர்தல்களையும் ஒன்றாக இணைப்பதன் மூலம், தேர்தல்களின் தனித்துவமான சூழல்களை கொள்ளையடித்து, மக்களின் அரசியல் தேர்வுகளை மட்டுப்படுத்த முயல்கிறது. கூட்டாட்சி இந்தியா மோடி அரசாங்கத்தின் இந்தி, இந்து, இந்துஸ்தான் கருத்தாக்கத்திற்கு மிகவும் துடிப்பான எதிர்ப்பையும் உறுதியான தடுப்பையும் வழங்குகிறது. இந்தி இதயப் பகுதிக்கு அப்பாற்பட்ட மாநிலங்களில் வளர்ந்து வரும் கலாச்சார மற்றும் அரசியல் கொந்தளிப்புகளில் கடைசல்களில் (அதே போல் வட இந்தியாவிற்குள்ளும் அதிகரித்து வருகிறது) இருந்து இதனைக் காணலாம். 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' என்பது அந்தக் கொந்தளிப்புகளை மட்டுப்படுத்தவும், ஜனநாயக இந்தியாவை ஏகாதிபத்திய வடிவமைப்பான ஒரு பாசிச ஆட்சிக்கு உட்படுத்துவதற்குமான ஒரு சூத்திர மாகும். இந்த வடிவமைப்பு, அதிகாரம் பெற்ற குடிமக்களை கைகட்டி நிற்கும் குடிகளாக மாற்றி, பாசிசத்தின் பிடிக்குள் இந்தியாவை அடிமைப்படுத்த, சட்டம், அரசாட்சி, அரசமைப்பின் கட்டமைப்பு ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்படும் தனித்தனியான முயற்சிகள் முழுவதையும் உள்ளடக்கியதாகும். இந்த சதித்திட்டத்தை இந்தியா அனைத்து வழிகளிலும் தோற்கடித்தேயாக வேண்டும்.

எம்எல் அப்டேட் தலையங்கம் 11-15 செப். 2023

**தமிழாக்கம் – செந்தில்**

## தோழர் ராஜாராமுக்கு செவ்வணக்கம்! தோழர் ராஜாராம் புகழ் நீடுழி வாழ்க!



சிபிஐ (எம்எல்) கட்சியின் மூத்த தலைவர். 74 வயதான தோழர் ராஜாராம் 1.9.2023 அன்று உடல் நலமின்றி பாட்னா மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் காலமானார். தோழர் ராஜாராம் பீகார் மாநில கட்சி நிலைக்குழுவின் தற்போதைய உறுப்பினர். கட்சி கட்டுப்பாட்டு ஆணையத்தின் முன்னாள் தலைவர். மத்திய குழுவின் முன்னாள் உறுப்பினர். இந்திய மக்கள் முன்னணியின் நிறுவனப் பொதுச் செயலாளர். பீகாரின் புகழ்மிக்க எமர்ஜென்சி எதிர்ப்பு 1974 இயக்கத்தின் தலைவராகவும் செயலாற்றினார். செப்டம்பர் 3 அன்று பாட்னாவில் நடைபெற்ற அஞ்சலி கூட்டத்தில் இகக(மாலெ) பொதுச் செயலாளர் திபங்கர், மூத்த அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் சுதேஷ் பட்டாச்சார்யா மற்றும் இடதுசாரி தலைவர்கள், மகா கூட்டணி தலைவர்கள் பங்கேற்றனர்.

# நாம் ஒரு பேரிடர் காலத்தில் இருக்கிறோம்!

**ரெட்டிஃப் டாட் காம் (rediff.com) இணைய இதழுக்கு இகக(மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் அளித்த பேட்டியின் முதல் பகுதி – தமிழாக்கம் தேசிகன்**

"இந்தியா" கூட்டணியில் 28 கட்சிகள் இடம் பெற்றிருக்கின்றன. இந்தியா கூட்டணி கட்சிகளின் கூட்டம் மும்பையில் நடைபெறுவதை ஒட்டி அங்கு கூட்டணிக்கு ஆதரவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செயல்வீரர்கள் கூட்டத்தில், கூட்டணியில் இருந்து மூன்று பேர் மட்டுமே கலந்து கொண்டனர். அதில் ஒருவர் இகக(மாலெ) பொதுச்செயலாளர். 61 வயதான திபங்கரின் அரசியல் ஈடுபாடு, பிரசித்திப் பெற்ற இந்திய புள்ளியியல் கழகத்தில் இளங்கலையும் அடுத்து முதுகலையும் பயின்றபோது துவங்கியது. ஜோதி புன்யானியுடனான இந்த உரையாடலில் அவர் இந்தியா கூட்டணியின் தேவைக்கான காரணம் பற்றியும் வறிய மக்களுக்கு ஜனநாயகம் என்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது பற்றியும் பகத்சிங், அம்பேத்கர் ஆகிய உணர் வெழுச்சியூட்டும் திருஉருக்களின் இதுவரை வெளிக்கொண்டுவரப்படாத ஆற்றல் பற்றியும் பேசியிருக்கிறார். இரண்டு பகுதிகளான நேர்காணலின் முதல் பகுதி இது.



**இந்தியா கூட்டணியிடமிருந்து மக்கள் பல்வேறு எதிர்பார்ப்புகளை கொண்டுள்ளனர். மேதா பட்கர் போன்றவர்கள் இக் கூட்டணி முற்றிலும் மாறுபட்ட வளர்ச்சி மாதிரிக்காக கடப்பாடு கொண்டதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். மற்ற சிலரோ பாஜகவை ஆட்சியில் இருந்து அகற்றினால் போதுமானது என நினைக்கிறார்கள். கூட்டணியில் அங்கம் வகிப்பவர் என்ற முறையில் உங்களது எதிர்பார்ப்பு என்ன?**

*நாம் சில காரணிகளை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. முதலாவதாக ஒரு பெரும் பகுதி மக்கள் இரண்டு பருவ கால இந்த ஆட்சியானது சீரழிவைத் தவிர வேறு எதையும் கொண்டு வரவில்லை என்று உணரத் துவங்கி உள்ளார்கள். மூன்றாவது முறை ஆட்சிக்கு வந்தால் அதன் விளைவுகளை அவர்களால் தாங்கிக் கொள்ள இயலாது.*

*இரண்டாவதாக, நாம் பல கட்சி ஆட்சி முறையை கொண்டிருந்தோம். ஆனால், இப்போது இரு துருவ முறை கூட இல்லாமல் போய்விட்டது. மத்தியில் ஒரு கட்சி ஆட்சி முறை என்பது இருக்கிறது. அவர்கள் 2047 வரை ஆட்சி செய்யப் போவதாகவும் பேசி வருகிறார்கள்.*

*கடந்த ஆண்டு ஆகஸ்ட் 9ஆம் தேதி பீகாரில் தேசிய ஜனநாயக கூட்டணியிலிருந்து நிதிஷ்குமார் வெளியேறி ஆர்ஜேடி உடன் கரம் கோர்த்துக் கொண்டார். அதற்கு 10 நாட்கள் முன்னதாக, பாஜகவை எதிர்த்து தேசிய அளவில் எந்த ஒரு கட்சியும் போட்டி யிட முடியாது என்றும் மற்ற எல்லா கட்சிகளும் அழித்தொழிக்கப் படும் என்றும் பாட்னாவில் பாஜக தலைவர் ஜே.பி.நட்டா தெரிவித்திருந்தார்.*

*எனவே காங்கிரஸ் இல்லாத பாரதம் என்பதிலிருந்து, எதிர்க்கட்சிகளே இல்லாத பாரதம் என்ற நிலைக்கு பாஜக வந்துள்ளது. எனவே தான் நாங்கள் இதை பாசிசம் என்கிறோம். அதை அகற்ற வேண்டியது அவசரமானது என நினைக்கிறோம்.*

*இங்கு பாசிசம் ஜெர்மானிய மாதிரியை தாண்டிப் போய்க்*

கொண்டிருக்கிறது. அங்கு ஒரே ஒரு ஹிட்லர்தான் இருந்தார். இங்கு மோடி போனால் அடுத்து யோகி காத்துக்கொண்டிருக்கிறார். அடுத்தடுத்து ஆட்களை அனுப்பும் ஒரு அணி வரிசை இங்குள்ளது.

**இந்த இடத்திற்கு நாம் எப்படி வந்து சேர்ந்தோம்?**

இது ஒரு நீண்ட இயக்கப் போக்கு.

1992ல் பாபர் மசூதி தகர்க்க நடைபெற்ற ஆயத்தப் பணிகளானது 2002 குஜராத்துக்கு இட்டுச் சென்றது. அதிலிருந்து இப்போது இஸ்லாமியர்களை குறி வைப்பது நடந்து வருகிறது. 1991 புதிய பொருளாதாரக் கொள்கையானது 2003இல் துடிப்புமிக்க குஜராத் மாநாட்டுக்கும் அதிலிருந்து இப்போது அரசு சலுகை சார் முதலாளித்துவமாகவும் வந்து சேர்ந்துள்ளது. ஹிமாச்சலிலும் உத்தரகாண்டிலும் ஆரம்பத்தில் துவங்கப்பட்ட நீர் மின் நிலையத் திட்டங்கள் இப்போது அங்கு நடைபெறும் பேரழிவுக்கான அடித்தளத்தை ஏற்படுத்தி இருந்தன. கூடவே பாஜக, சுற்றுலாத் துறைக்கும் சாலைகளுக்கும் கொடுக்கும் அதி முக்கியத்து வமும் சேர்ந்து கொண்டது. ஏற்கனவே உபா (UAPA)சட்டம் உள்ளது. பாஜக அதன் மீது கட்டி எழுப்ப மட்டுமே செய்கிறது.

2014 அவர்களுக்கு மிகப்பெரிய வாய்ப்பாக அமைந்தது. அதிலிருந்து சூழல் மிகவும் வேகமாக மாற்றமடைந்து இப்போது அவர்கள் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றுவது பற்றி பேசுகிறார்கள். தங்களது நோக்கங்களை மறைக்க இப்போது எந்தக் காரணமும் சொல்ல வேண்டிய தேவை இல்லை என நினைக்கிறார்கள். அம்பேத் காரால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தை "ஆங்கிலேய அரசியலமைப்புச் சட்டம்" என்று விவரிக்கிறார்கள்.

அரசியலமைப்பு சட்டத்தை மாற்ற வேண்டும் என்ற பிபேக் தேப் ராய் கட்டுரையில் இந்து ராஷ்ட்ரா பற்றி எவ்வித குறிப்பும் இல்லை என்பது ஆச்சரியப்பட வைக்கிறது. ஆட்சியை அரசியல்படுத்த வேண்டும் என்பதும் அரசாங்கத் தின் மூன்று நிறுவனங்களுக்கு இடையில் பிரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களை இல்லாமல் ஒழிக்க வேண்டும் என்பதும்தான் அவர்களுடைய நோக்கமாகும்.

பாஜக ஒருவேளை இது எங்களது அதிகாரபூர்வ நிலைப்பாடு இல்லை என்று சொல்லக் கூடும். ஆனால், பிபேக் தேப் ராய் பிரதமரின் முதன்மை பொருளாதார ஆலோசகராக இருக்கும்போது அவர் சொல்வது முக்கியத்துவம் பெறுகிறது.

இன்றைய சூழலைப் புரிந்து கொள்ள அம்பேத்கர் என்ன சொன்னார் என்பதை நினைவு கூறுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

முதலாவதாக, அவர் இந்தியாவில் தனிநபர் துதி பாடலின் ஆபத்துகளைப் பற்றி பேசினார். அவர், "இந்தியாவில் ஜனநாயகம் என்பது அடிப்படையில் ஜனநாயகத் தன்மையற்ற இந்திய மண்ணின் மீதான மேல் பூச்சு" என்று சொல்லி இருந்தார்.

இரண்டாவதாக "பொருளாதார ஏற்றத்தாழ்வு தொடர்ந்து அதிகரிக்கும் போது, தேர்தல் சமத்துவம் என்பதில் பெரிய பொருள் இல்லை" என எச்சரிக்கை விடுத்திருந்தார். ஆக்ஸ்பாம் அறிக்கை வெளிப்படுத்தி இருப்பதை போல பொருளாதார சமத்துவமின்மை இப்போது அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

இறுதியாக அவர் "இந்து ராஜ்ஜியம் என்பது நாட்டுக்கு மிகப்பெரும் பேரழிவாக அமையும்" என்று விவரித்திருந்தார்.

அவர் சுட்டிக்காட்டிய மூன்று சூழ்நிலை களும் இப்போது நிலவுகின்றன. இப்போது நாம் பேரழிவு காலத்தில் இருக்கிறோம்.

பேரழிவை எதிர்கொள்ள, பேரழிவு கால நிர்வாக அணுகுமுறையை நாம் மேற்கொண்டே ஆக வேண்டும் என பொது புத்தி சொல்கிறது. அப்படியானால், நாம் முதலில் செய்ய வேண்டி யது மீட்பு நடவடிக்கை. நாம் ஜனநாயகத்தை மீட்க வேண்டும். மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளின் மூலம் எவ்வளவு தூரம் ஜனநாயகத்தை மீட்க முடியும் என்பதை என்னால் சொல்ல இயலாது.

மீட்பு நடவடிக்கையைத் தொடர்ந்து நிவாரண நடவடிக்கை வரும். பேரழிவால் குறி வைக்கப்பட்டவர்கள் சிறுபான்மையினராக அல்லது சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களாக (MSME), தலித்துகளாக, ஆதிவாசிகளாக இருக்க லாம். அவர்களுக்கு நிவாரணம் தேவை. மூன்றா வது நடவடிக்கை என்பது மறு கட்டுமானம். பாசிசத்தை எதிர்கொள்ளும் அளவுக்கு வலிமை யுள்ள மிகப்பெரிய ஜனநாயகத்தை நாம் கட்டி எழுப்ப வேண்டும்.

இப்படிப்பட்ட சூழலை அங்கீகரிக்கிற வகையில்தான் 'இந்தியா' கூட்டணி என்பது உருவாக்கப் பட்டுள்ளது. இது பரந்த அடித்தளம் கொண்ட கூட்டணி மட்டுமல்ல. முகிழ்ந்து வரக்கூடிய கூட்டணியுமாகும். 5 ஆண்டுகளுக்கு முன்னர் சிவசேனாவும் இடதுசாரிகளும்

ஆர்ஜேடியும் இகக(மாலெ)யும் ஒரே அணியில் இருப்பார்கள் என்பதை யாரும் நினைத்துக் கூட பார்த்திருக்க முடியாது. ஆனால் இது இப்போதுள்ள சூழலின் தேவையாக உள்ளது.

இகக(மாலெ)யின் பாதையானது மீட்பிலிருந்து வலுவான சோசலிச அமைப்பு முறையை நோக்கியதாகும். கூட்டணியில் உள்ள மற்றவர்களுக்கு கொஞ்சம் சமநிலையைத் திரும்பக் கொண்டு வந்தால் போதும் என்பதாக கூட இருக்கலாம்.

**பல வகையான கட்சிகளும் கூட்டணியில் இடம் பெற்றுள்ளதைப் பார்த்து வியக்கும் சில செயல்வீரர்கள், இடதுசாரிகள் கூட்டணியில் சேருவதற்கு பதிலாக வெளியில் இருந்து ஆதரவளித்தால் போதாதா? என்கின்றனரே.**

2024ல் அரசாங்கம் அமையுமானால் அப்போது அதைப் பற்றிப் பேசலாம்.

பீகாரில் 12 சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தும் நாம் அரசாங்கத்தில் பங்கேற்கவில்லை. அமைச்சகங்களை நாங்கள் விரும்பவில்லை. மக்கள் இயக்கங்கள் மூலம் அரசாங்கத்தின் மீது செல்வாக்கு செலுத்த விரும்பினோம். மக்கள் விரோத அரசாங்கம் என நாங்கள் உணரும்போது அந்த அரசாங்கத்தை எதிர்ப்போம்.

சமீபத்தில் இரண்டு நீண்ட போராட்டங்களை நடத்தி இருக்கிறோம். மாநில அரசின் புதிய ஆளெடுப்பு விதிகளுக்கு எதிராக ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினர். பஞ்சாயத்துகள் மூலம் ஆளெடுப்பு நடத்தப்பட்டு பல ஆண்டுகளுக்கு முன்பாக பணியில் சேர்ந்த ஆசிரியர்கள், மாநில அளவிலான தேர்வைப் புதிதாக எழுத வேண்டும் என புதிய விதி கொண்டுவரப்பட்டது. இந்த ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் என்ற அங்கீகாரம் கிடைத்துவிடும் என்று எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்த வேளையில் இந்த விதி கொண்டு வரப்பட்டது. கடைசியாக முதலமைச்சர் வேலை நிறுத்தம் செய்த ஆசிரியர்களை சந்தித்து தீர்வு கிடைக்கும் என உறுதி அளித்திருக்கிறார்.

இரண்டாவது மதிப்பூதியம் கூட வழங்கப் படாத பீகாரின் ஆஷா தொழிலாளர்கள் போராட்டம். அவர்களுக்கு 'வெகுமதி' என்றொரு பெயரில் சொற்பத் தொகை வழங்கப்பட்டு வந்தது. அவர்களது 31 நாட்கள் போராட்டம், ரூபாய் 1500 ஊதிய உயர்விலும் அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் 'மதிப்பூதியம்' என பெயர் மாற்றம் செய்யப்படுவதிலும் முடிந்திருக் கிறது.

இரண்டு போராட்டங்களிலும் எங்கள் தோழர்கள் முன்னணியில் நின்று வழி நடத்தினார்கள். இதன் மூலம் நாங்கள் அரசாங்கத் துக்கும் மக்கள் இயக்கங்களுக்குமிடையிலான பாலமாக இருந்து உரிய பாத்திரத்தை ஆற்றியிருக் கிறோம்.

**பாஜக அதிகாரத்தில் இல்லாததால் பீகார் நிலைமைகளில் இப்போது மாற்றம் நிகழ்ந்து உள்ளதா?**

உண்மையிலேயே அப்படி நிகழவில்லை பீகாரிலும் கூட புல்டோசர்கள் பயன்படுத்தப் படுகின்றன. நிர்வாகமும் காவல்துறையும் இன்னமும் கூட ஆர்எஸ்எஸ் சார்பு நிலையி லிருந்து செயல்படுகின்றன.

மே மாதத்தில், இந்து ராஷ்ட்ராவை முன் மொழிந்த பாபா பாகேஸ்வர் தம்மின் உரையை கேட்டு விட்டு வெளியில் வந்தவர்கள், தங்கள் கண்ணில் பட்ட அருகில் இருந்த அம்பேத்கார் சிலையைச் சேதப்படுத்தினார்கள். பின்னர் இன்னொரு சிலை அமைப்பதற்காக எழுப்பப் பட்ட மேடையை நிர்வாகமே இடித்துத் தள்ளியது. இரண்டு நிகழ்வுகளிலுமே மீண்டும் அவற்றை அமைத்துக் கொடுக்க வலியுறுத்தி வலுவான பிரச்சார இயக்கத்தை நாங்கள் தலைமை தாங்கி நடத்தினோம்.

**அம்பேத்கர் பற்றி பேசும்போது, இன்றைய தலித் அரசியலை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

நீங்கள் கருத்தியலையும் அரசியலையும் பிரித்தீர்களென்றால், அடையாள அரசியல் என்பது ஆதிக்கம் செலுத்தும் அரசியல் சக்திகளால் பயன்படுத்தப்பட்டுவிடும். இன்றைய தலித் அரசியல் அப்படித்தான் நடந்து கொண்டி ருக்கிறது. அடையாளத்தை கருத்தியலுடன் நாம் இணைக்க வேண்டும்.

துரதிஷ்டவசமாக, அம்பேத்கரிய கருத்தியல் வளர்ந்த விதமானது, அம்பேத்கரை ஒரு தலித் திருவுருவாகச் சுருக்கி விட்டது. அவர் அரசியல மைப்புச் சட்டத்தை உருவாக்கியவர் என்றும் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் கர்த்தா என்றும் புகழப்படுகிறார். இப்போது பாஜக அவரை முஸ்லிம்களுக்கு எதிரானவர் என்று சித்தரித்து, அவரின் எழுத்துக்களை பொருத்தப்பாடற்ற விதத்தில் பயன்படுத்தி அவரை தன்வயப்படுத்தி யிருக்கிறது.

அம்பேத்கரும் பகத்சிங்கும் மிகவும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட கருத்தியல் திருஉருக்கள். விடுதலைக்காக தன்னுயிரைத் தந்த புரட்சியாளராக மட்டுமே பகத்சிங் முன்னிறுத்தப் படுகிறார். ஆனால், இன்றைய சூழலில் அவரின்

*கருத்துக்கள் உங்களிடம் பேசுகின்றன.*

*அதேபோல்தான் அம்பேத்கரும். அவரை நாம் காத்திரமாக எடுத்துக் கொண்டிருந்தால், அவருடைய தாக்கம் என்பது வேறு விதமாக இருந்திருக்கும். உண்மையிலேயே, தலித்துகள் மாத்திரமல்ல, இந்த நாடே அம்பேத்கரை மீள் ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. அவருடைய கருத்துக்களை நாம் மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும். விடுதலைக்குப் பின்பு, விடுதலைப் போராட்ட இயக்கத்தின் மூலம் நாம் பெற்ற அதிமுக்கியத்துவமான பயன் அரசியலமைப்புச் சட்டம் என்பதை நாம் விளக்கத் துவங்க வேண்டியதிருக்கிறது.*

*நமது முதன்மையான விடுதலைப் போராட்டத் தலைவர்களில் ஒருவராக அம்பேத்கர் பார்க்கப்பட வேண்டும். சுதந்திர இந்தியாவுக்காக போராடியவர்கள் இருந்தார்கள். சுதந்திர இந்தியா எப்படி இருக்க வேண்டும் என்று எண்ணியவர்களும் இருந்தார்கள். அம்பேத்கர் அதைத்தான் செய்தார்.*

*தலித் இயக்கத்துக்கும் இடதுசாரி இயக்கத் துக்கும் இடையே வரலாற்று ரீதியாகவே தவறான புரிதலும் இடைவெளியும் இருந்து வருகின்றது. அவை நீக்கப்பட்டுவிட்டால் பாசிசத்தை இன்னும் வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும். நல்ல வேளையாக, பீகாரின் களத்திலிருந்து ஒரு புதிய முழக்கம் எழுந்து வருகிறது: "ஜெய் பீம்! லால் சலாம்!"* ❑

# ஓபிஎஸ் (பழைய ஓய்வூதியத் திட்டம்) வேண்டும்! மாற்றியமைக்கப்பட்ட என்பிஎஸ் (புதிய ஓய்வூதியத் திட்டம்) வேண்டாம்!

**வீ.சங்கர்**

– சென்ற இதழ் தொடர்ச்சி

**ஓபிஎஸ் எதிர் என்பிஎஸ் : பலன் எதிர் பங்களிப்பு**

*அரசுத்துறை, பொதுத்துறைகளில் 2004 ஆம் ஆண்டு முதல் பணிக்கு சேர்ந்த ஊழியர்களுக்கு தேசிய (புதிய) ஓய்வூதியத் திட்டம் (என்பிஎஸ்) பொருந்தும். ஊழியர்களுக்கு அவர்கள் கடைசியாக வாங்கிய சம்பளத்தில் 50 சதவீதம் வரையறுக்கப்பட்ட பலனை பழைய ஓய்வூதியத் திட்டம் உறுதி செய்துள்ளது. 60 வயது வரை இந்தப் பணியில் அவர்கள் செலவழித்த உழைப்பு தான் ஓய்வூதியத்திற்கு அவர்களின் முதலீடாகும். ஓய்வூதிய நிதிக்கு தனியாக வேறு எந்த பங்களிப்பும் தேவையில்லை. ஊழியர்கள் பணிபுரியும் காலத்தில் அவர்கள் செய்த வேலைக்கு ஒரு பலனாக, ஒரு நிலையான தொகை ஓய்வூதியமாகக் கருதப்பட்டது. கடைசி மாதம் ரூ.30,000 சம்பளத்துடன் ஓய்வு பெற்ற ஒரு நபருக்கு ஓய்வூதியமாக ஒவ்வொரு மாதமும் 15,000 ரூபாயும் பணவீக்கத்துடன் இணைக்கப் பட்ட அகவிலைப்படியுடன் சேர்த்து, தோரா யமாக மாதம் ரூபாய் 20,000 வழங்கப்படலாம். இத்தொகை மூலம், ஒரு முதியவர் தனது முதுமைக் காலத்தில் வறுமையில் விழாமல் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.*

*ஆனால், என்பிஎஸ்-புதிய ஓய்வூதியத் திட்டம் என்பது ஊழியர்கள் பங்களிப்பு செய்யும் திட்டமாகும். அதன்படி 2004ஆம் ஆண்டு முதல் பணிக்கு சேர்ந்த ஊழியர்கள் தங்கள் சம்பளத்தில் 10 சதவீதத்தை தங்களது பங்காகவும் அரசாங்கம் 14 சதவீதத்தை தனது பங்காகவும் செலுத்த வேண்டும். பதிலுக்கு, ஆண்டுத் தொகையில் 10 சதவீதத்திற்கும் குறைவாகவே அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு பெறுகிறார்கள். இதுவும் கூட, வைப்புத் தொகையின் அளவு, நிதிச் சந்தையில் நிகழும் எதிர்பாரா மாற்றங்கள், பணி செய்த ஆண்டுகள், இதுபோன்ற இன்னபிற, பல்வேறு காரணிகளால் பாதிக்கப்படுகிறது.*

*என்பிஎஸ் நிதிகள் உள்நாட்டு, வெளிநாட்டு நிதி மேலாளர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. இந்தப் பணம் ஊக நிதி சந்தையில் புழக்கத்தில் விடப்படுகிறது. யூடிஐ (யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா) இன் சுமார் 27 சதவீத பங்குகள் அந்நிய நிதி நிறுவனங்களுக்கு சொந்தமானவை. மேலும் இது தொடர்பான பல்வேறு விசயங்களில் மாறுபட்ட கருத்துகள் வெளிவரத் தொடங்கி யுள்ளன. பங்குச் சந்தையில் இருக்கும் ஓய்வூதிய நிதியிலிருந்து திரும்பக் கிடைக்கும் தொகையின் அளவு மாறுபடுவதாலும், அதில் ஏற்படக்கூடிய இழப்புகளாலும், தனிப்பட்ட ஊழியர்களுக்கு*

ஓய்வூதியமாக இறுதியில் கிடைக்கும் ஊதியம் நிச்சயமான தாக்கத்திற்கு உள்ளாகும். நிதி மேலாண்மை நிறுவனங்கள் திவாலாகும் பட்சத்தில், அதன் சுமையை ஊழியர்கள் தாங்க வேண்டியிருக்கும். நிறுவனங்கள் சலுகைகளை அனுபவிக்கின்ற அதே நேரத்தில் இதனை எதிர்கொள்ள ஊழியர்களுக்கு அரசு எந்த உத்தரவாதமும் அளிக்காது.

அடிப்படையில், என்பிஎஸ்-ன் கீழான பங்களிப்பு வரையறுக்கப்பட்டுள்ள போது, அந்தப் பங்களிப்புகளில் இருந்து ஓய்வூதியம் என்பதாக திரும்பப் பெறப்படும் தொகை குறித்து வரையறை ஏதும் இல்லை. என்பிஎஸ் ஆனது அவர்களின் பணிக்காலத்தில் ஒவ்வொரு தனிப் பட்ட ஊழியர்களின் உண்மையான சேமிப்புகள் மற்றும் சம்பாதிப்புகளுக்கு விகிதாசாரமாக வழங்கப்படுமே தவிர, ஓய்வுக்குப் பிறகு அவர்களின் தேவைகளையும் பிரச்சனைகளையும் கருத்தில் கொள்ளாது. என்பிஎஸ் இன் பல நிகழ்வுகளில், ஊழியர்கள் மாத ஓய்வூதியமாக வெறும் ரூ.1,000 அல்லது ரூ. 2,000 மட்டுமே பெறுவதையும் நாம் காண்கிறோம். பிப்ரவரி 2022 வரை 22.74 லட்சம் மத்திய அரசு ஊழியர்களும், 55.44 லட்சம் மாநில அரசு ஊழியர்களும் என்பிஎஸ் இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

அரசு ஊழியர்கள், குறிப்பாக இளம் தலை முறையினர், அவர்கள் ஓய்வுக்குப் பிறகான எதிர்கால வாழ்க்கை கேள்விக் குறியாவதன் காரணமாக, அதிலும் குறிப்பாக, என்பிஎஸ்-ன் கீழ் குறைந்த ஓய்வூதியம் பெறுவதன் பின்னணியில் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். பழைய ஓய்வூதியத் திட்டத்தைத் திரும்பக் கொண்டு வருதற்கான கோரிக்கை என்பது அவர்களின் முதிய, “உற்பத்தியில் ஈடுபட முடியாத” வயதில் வறுமையைத் தணிப்பதற்கான கோரிக்கையே அன்றி வேறல்ல. அவர்கள் கடைசியாக பெற்ற ஊதியத்தில் 50 சதவீதத்தை, அதிகரித்து வரும் பணவீக்கத்தை ஈடுகட்டு வதற்காக வழங்கப்படும் அகவிலைப்படியுடன் சேர்த்து ஓய்வூதியமாக வழங்க வேண்டும் என்பதே கோரிக்கையாகும். தற்போது 2003க்குப் பிறகு பணியில் சேர்ந்த தொழிலாளர்கள் பழைய ஓய்வூதிய திட்டத்தை திரும்பக் கொண்டு வரும் இயக்கத்தின் முதுகெலும்பாக உள்ளனர். இந்த இளம் தொழிலாளர்களின் கோரிக்கைக்கு செவி சாய்க்க மறுத்தால் அரசாங்கம் அவர்களின் கோபத்தை எதிர்கொள்ள வேண்டிய கட்டா யத்திற்கு உள்ளாகும்.

### ஊழியர்களின் ஓய்வூதியத் திட்டம் (இபிஎஸ்)

வருங்கால வைப்பு நிதியின் (பிஎஃப்) கீழ் உள்ள மற்றொரு ஓய்வூதியத் திட்டம் ஊழியர்களின் ஓய்வூதியத் திட்டம் (இபிஎஸ்) ஆகும். இது முக்கியமாக ரூ.15,000 வரை ஊதியம் பெறும் தனியார் துறை ஊழியர்களை உள்ளடக் கியது. அவர்கள் தங்கள் ஊதியத்தில் 12 சதவீதத்தை பிஎஃப்க்காக செலுத்துகிறார்கள். அதற்கு சமமான தொகையை முதலாளியும் அவர்களின் கணக்கில் செலுத்துகிறார். தொழிலாளர்களும் நிர்வாகத்தினரும் சேர்ந்து செலுத்தும் மொத்த பங்களிப்பான 24 சதவீதத்தில், 8.33 சதவீதம் ஓய்வூதிய நிதிக்கு செல்கிறது. மீதமுள்ள தொகை தொழிலாளி ஓய்வுபெறும் போது வட்டியுடன் சேர்த்துத் திருப்பித் தரப்படுகிறது. இத்திட்டத்தில் பெரும்பான்மை யானவர்கள் குறைந்தபட்ச ஓய்வூதியமாக ரூ. 1,000 மட்டுமே பெறுவதால், அவர்கள் முதுமையில் வறுமையை சமாளிக்கப் போராடு கிறார்கள் என இறுதிப் பகுப்பாய்வில் நாம் காண்கிறோம். அவர்கள் ஒரு கௌரவமான, கண்ணியமான வாழ்க்கையை நடத்தத் தேவை யான அளவுக்கு அவர்களின் ஓய்வூதியத்தை உயர்த்தும் திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை.

### அடல் பென்ஷன் யோஜனா (ஏபிஒய்)

அடல் பென்ஷன் யோஜனா என்பது மாதம் ரூ.1,000 முதல் ரூ.5,000 வரை ஓய்வூதியம் பெறுவதை உறுதி செய்யும் ஓய்வூதியத் திட்டமாகும். முறைசாரா துறையைச் சேர்ந்த அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூ தியத்தை வழங்க, ஒவ்வொருவரின் பங்க ளிப்பைப் பொறுத்து, 1,000த்தின் மடங்குகளில் ஓய்வூதியம் உறுதி செய்யப்படுகிறது. 18 வயது முதல் 39 வயது வரை உள்ள தொழிலாளர்கள் இத்திட்டத்தில் சேர அனுமதிக்கப்படுவார்கள். மேலும் 20 ஆண்டுகளுக்கு குறையாமல் ஓய்வூதியத்திற்காக மாதந்தோறும் அவர்கள் பங்களிக்க வேண்டும். 40 மற்றும் அதற்கு மேல் வயதுடைய ஒரு தொழிலாளி இத்திட்டத்திற்குத் தகுதியற்றவராவார். ஒருவர் ஓய்வூதியமாக ரூ. 5,000 பெற வேண்டுமெனில், அவர் மாதம் ரூ. 210 (18 வயதுப் பங்களிப்பாளர் 42 ஆண்டு களுக்கு) முதல் ரூ.1,318 வரை (39 வயதுப் பங்களிப்பாளர் 21 ஆண்டுகளுக்கு) பங்களிக்க வேண்டும். என்பிஎஸ்-லைட் என்பது அதே பிரிவை உள்ளடக்கும் நோக்கத்தில் உள்ள மற்றொரு திட்டமாகும்.

இந்தத் திட்டங்களின் கீழ் பங்களிப்பவர்கள் ஜுலை 2018 நிலவரப்படி 1.57 கோடியாக உயர்ந்துள்ளனர். இருப்பினும், நாட்டில் உள்ள மொத்த அமைப்புசாரா தொழிலாளர்களின் எண்ணிக்கையான 39.14 கோடியில் (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி) இது வெறும் 4 சதவீதமாக மட்டுமே உள்ளது.

**வேலையில் இருக்கும் போதும் வறுமை**

நாட்டில், பாதுகாப்பான அல்லது சிறந்த வேலைகளோ அல்லது அவர்களின் எதிர்கால ஓய்வூதியத்திற்கு பங்களிக்க ஊதியமோ இல்லாத, 93 சதவீத தொழிலாளர்களின் முறைசாரா வேலைகளின் அபாயகரமான அதிகரிப்பு மிகுந்த கவலையளிக்கிறது. மிகக் குறைவான ஊதியத்தையும் அதிகரித்து வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் தீர்ப்பதன் மூலம் நாட்டில் உழைக்கும் மக்களின் ஏழ்மை போன்ற பிரச்சனைகளைத் தீர்க்கும் போது மட்டுமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். போதுமான கால அளவுக்கு வேலையின்மை என்பது அமைப்பாக்கப்படாத தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் ஒரு பெரிய பிரச்சனையாகும். மேலே குறிப்பிட்டுள்ள அடிப்படை பிரச்சனைகளை சரிசெய்ய அரசாங்கம் முயற்சித்தால் ஒழிய, சமூக, பலன் அல்லது பங்களிப்பு ஓய்வூதியப் பிரச்சனையைத் தீர்க்க முடியாது. உழைக்கும் வயதில் வறுமையைக் குறைப்பதற்கான ஒரு உத்தி மட்டுமே முதிய, ஓய்வூதியம் பெறும் வயதில் வறுமைக்கு தீர்வாக இருக்கும். உள்நாட்டு மற்றும் உலகளாவிய மூலதனம் இரண்டுமே, நாட்டையும் மக்களையும் வளம்பெறச் செய்வதற்கான அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்கத் தவறிவிட்டன.

**சமூக ஓய்வூதியம்**

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியத்தை நீட்டித்ததாக மோடி தலைமையிலான பாஜக அரசு கூறுகிறது. ஆனால், இந்தத் திட்டங்கள் அனைத்தின் கீழும் வழங்கப்படும் ஓய்வூதியம் சில ஆயிரங்களுக்கு மேல் இல்லை. பெரும்பாலும் ஆயிரம் மட்டுமே. இது நாட்டிலுள்ள எந்தவொரு தனி மனிதனுக்கும் கண்ணியமான வாழ்க்கையை நடத்தத் தேவையான அளவிற்கும் மிகக் குறைவானது.

மறுபுறம், அறிமுகம் செய்யப்பட்டு, செயல்படுத்தப்படுவதற்குத் தயாராக உள்ள சமூகப் பாதுகாப்புச் சட்டம் சமூகப் பாதுகாப்பு வழங்கும் பொறுப்பை முதலாளிகள் அல்லது அரசாங்கத்திடம் இருந்து விலக்கி. அதனை ஒவ்வொரு தொழிலாளியின் மீதே சுமத்துகிறது.

நாட்டில் உள்ள வறுமை, வேலையின்மை, ஊதியங்களின் அளவு ஆகியவற்றுடன் சிக்கலான முறையில் ஓய்வூதியம் குறித்த பிரச்சனை இணைக்கப்பட்டுள்ளது. இது தனிப்பட்ட தொழிலாளர்களின் வாழ்க்கையை அதன் போக்கில் பாதிக்கிறது. ஒவ்வொரு தொழிலாளிக்கும் குறைந்தபட்ச அளவுக்காவது ஓய்வூதியத்தை வழங்கும் சமூக ஓய்வூதியத்திற்கு மாற்று வேறு எதுவும் கிடையாது. அரசாங்கங்கள் முறையாக உத்திகளை வகுத்தால், நாட்டில், பொருளாதாரத்தில் மற்றும் தனிப்பட்ட ஓய்வூதியதாரர்களின் வாழ்வில் வளர்ச்சியை இந்த முற்போக்கான சமூக ஓய்வூதியம் ஏற்படுத்தும் என்பதற்கான பல படிப்புகளும் ஆய்வுகளும் உள்ளன.

தொழிலாளர்கள் வேலை செய்ய முடியாத காலத்தில், முதிய வயதில் அவர்களின் நலனை ஏற்றுக் கொள்ள அரசாங்கம் அவசியம் திட்டமிட வேண்டும். கண்ணியமான வாழ்க்கையை நடத்துவதற்கு தேவையான, கண்ணியமான ஓய்வூதியத்திற்கு அரசாங்கம் உத்தரவாதம் செய்யாமல் அந்தச் சுமையை தொழிலாளர்கள் மீது ஏற்றினால், அது நாட்டின் பொருளாதாரத்தின் மீது நெருக்கடியை அதிகரிக்கும்.

**உலக ஓய்வூதியக் குறியீடு**

இந்த விசயத்தில் இந்தியாவின் நிலையானது மிகவும் மோசமாக உள்ளது. மெர்சர் மற்றும் சிஎஃப்ஏ நிறுவனம், 44 நாடுகளை உள்ளடக்கிய, தனது 14வது வருடாந்திர மெர்சர் சிஎஃப்ஏ நிறுவன உலக ஓய்வூதியக் குறியீட்டை (எம்சிஜிபிஐ) 2022 அக்டோபரில் வெளியிட்டது. அதில் ஐஸ்லாந்து முதலிடத்தைப் பிடித்த அதேவேளை தாய்லாந்து கடைசி இடத்தைப் பிடித்தது. 44 நாடுகளில் கடைசி நிலையில் 41வது இடத்தை இந்தியா பிடித்தது. ஐஸ்லாந்து (1) நெதர்லாந்து (2), டென்மார்க் (3), இஸ்ரேல் (4), பின்லாந்து (5) ஆகியவை முதல் 5 இடங்களைப் பிடித்தன. துருக்கி (40), இந்தியா (41), அர்ஜென்டினா (42), பிலிப்பைன்ஸ் (43), தாய்லாந்து (44) ஆகியவை கடைசி 5 இடங்களைப் பிடித்தன.

டபிள்யு ட்டி டபிள்யு மற்றும் திங்கிங் அஹெட் நிறுவனம் நடத்திய 'உலக ஓய்வூதிய சொத்துகள் ஆய்வு 2023', ஆஸ்திரேலியா, கனடா, ஜப்பான், நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, யுகே,

யுஎஸ் உள்ளிட்ட ஏழு பெரிய சந்தைகள் உலகின் மொத்த ஓய்வூதிய சொத்துக்களில் 92 சதவீதத்தை கொண்டுள்ளன என்று கூறுகிறது. உலகின் ஓய்வூதிய சந்தைகளின் பெரும்பகுதி இந்த ஏழு பெரிய சந்தைகளில் குவிந்துள்ளது. மேலும் மீதமுள்ள ஓய்வூதிய சந்தைகளை நோக்கிய விரிவாக்கத்தையும் ஊடுருவலையும் உலக மூலதனம் திட்டமிட்டுள்ளது. எனவே, இந்தியா உட்பட உலகெங்கிலும் உள்ள நாடுகளில் மேற்கொள்ளப்படும் ஓய்வூதிய சீர்திருத்தங்கள், ஓய்வூதிய மூலதனத்தை திரட்டுவதில் கவனம் குவிப்பதன் மூலம், ஓய்வூதிய சந்தைகளை விரிவுபடுத்த முனைகின்றன. இதற்கான முதன்மைப் பட்டியலில் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் இடம் பெற்றுள்ளன. மிகப் பெரும் பான்மையான அமைப்புசாரா தொழிலாளர்களை ஓய்வூதியம் மற்றும் இதர சமூகப் பாதுகாப்பு திட்டங்களின் வலைக்குள் கொண்டுவரும் மோடி அரசாங்கத்தின் முயற்சியானது, நாட்டில் உள்ள அமைப்புசாரா தொழிலாளர்கள் கடினப்பட்டு சேர்த்த சிறுசேமிப்புகளைப் பிடுங்கி மூலதனத்தைக் குவித்து, அதன் மூலம் நிதிக் கட்டமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆனால், ஓய்வூதியத் திட்டத்தை எல்லாருக்கும் விரிவுபடுத்தியுள்ளோம் என்று வாய்ச்சவடால் பேசுகிறது. சமூகப் பாதுகாப்புக் குறியீடு என்பது அமைப்புசாரா தொழிலாளர்களைப் பயன்படுத்தி பணக்காரர்களுக்கும் அதிகாரவர்க்கத்தினரும் பயன்பெற மூலதனத்தைக் குவிப்பதற்கான ஒரு கருவியே தவிர வேறல்ல.

## எழுந்துவரும் போராட்ட அலைகள்

இன்று தொழிலாளர் வர்க்கம் எதிர் கொள்ளும் ஒரு முக்கிய பிரச்சினை ஓய்வூதிய சீர்திருத்தங்களாகும். மிகச் சமீபத்தில், ஓய்வு பெறும் வயதை அதிகரித்து, ஓய்வூதியப் பலன்களை குறைத்ததற்கு எதிராக பிரான்சில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் போராட்டத்தில் இறங்கினார்கள். அதில் வன்முறை வெடித்தது. ஓய்வூதியப் பிரச்சினையில் ஒட்டு மொத்த ஐரோப்பாவும் பதற்றத்தில் உள்ளது.

இந்தியாவிலும், என்பிஎஸ்-புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு எதிராகவும், பழைய ஓய்வூதியத் திட்டத்தைத் திரும்பக் கொண்டு வரவும் பல்வேறு அமைப்புகள் தொடர் போராட்டங் கள் நடத்தி வருவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சில ஆண்டுகளாக ஓய்வூதியப் போராட்டத்தின் முன்னோடியான எஃப்ஏஎன்பிஎஸ்ஆர் (ரயில்வேயில் என்பிஎஸ் ஸிற்கு எதிரான முன்னணி) உள்ளிட்ட என்எம்ஓபிஎஸ் (ஓபிஎஸ் க்கான தேசிய இயக்கம்), அக்டோபர் 1 ஆம் தேதி டெல்லியில் மாபெரும் போராட்டத்தை அறிவித்து, பீகாரில் உள்ள சம்பரானில் இருந்து தனது யாத்திரையைத் தொடங்கியுள்ளது. இரயில்வே ஊழியர்களின் மாற்று இடதுசாரி கூட்டமைப்பான ஐஆர்ஈஎஃப் (இந்திய இரயில்வே ஊழியர் கூட்டமைப்பு), என்எம்ஓபிஎஸ்க்கு தனது முழுமையான ஆதரவை வழங்கியுள்ளது. மத்திய, மாநில அரசு ஊழியர்களின் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் சங்கங்களின் மேடை, இந்த இயக்கத்தில் தாமதமாக நுழைந்த போதிலும், ஜேஎஃப்ஆர்ஓபிஎஸ் (ஓபிஎஸ்ஐ திரும்பக் கொண்டு வருவதற்கான கூட்டு மன்றம்)-ன் கீழ் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி ஆகஸ்ட் 10 ஆம் தேதி டெல்லியில் ஒரு மாபெரும் பேரணியை நடத்தியது.

நாட்டின் மத்திய தொழிற்சங்கங்கள் அகில இந்திய வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில், அதற்கு ஒருங்கிணை வாகவும், அக்கம் பக்கமாகவும் இபிஎஸ் ஓய்வூதியர் அமைப்புகளும் விரைவில் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்யத் தயாராகி வருகின்றன. 2023 டிசம்பரில் ரயில் மற்றும் சாலை மறியல் போராட்டம் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஓய்வூதிய இயக்கம் நாட்டில் சீராக எழுந்து வருகிறது. நாடு முழுவதும் இருக்கும் முதிய குடிமக்கள் கௌரவமான ஓய்வூதியத்துடன் பாதுகாப்பான எதிர்காலத்தையும் கண்ணியமான வாழ்வையும் பெற, 2024 தேர்தலில் மோடியை தோற்கடிக்கும் புள்ளியில் ஓய்வூதியம் கோரும் பெரும்பான்மையான இயக்கங்கள் ஒன்றாக சங்கமிக்கும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை.

மாலெ தீப்பொறி

சந்தாதாரர் ஆகிடுவீர்!

மாதம்
இருமுறை

நன்கொடை தாரீர்!!

தனி இதழ் ரூ.10
ஆண்டுச் சந்தா ரூ.200

# செப்டம்பர் 2-13 மக்கள் சந்திப்பு பரப்புரைப் பயணம்



கிராமப்புர மக்களின் நிலம், வேலை, கூலி, கவுரவம், ஜனநாயகம் கோரிக்கைகளை வலியுறுத்தும் பரப்புரைப் பயணம் தோழர் சந்திரகுமார் பிறந்த ஊரான பெருந் தோட்டத்தி லிருந்து 2023 செப்டம்பர் 2 அன்று தொடங்கியது. தரிசாக கிடக்கும் நிலத்தை உழைக்கும் மக்களுக்கு பிரித்து கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை மீது உற்சாக மிக்க பெருந்திரள் கிளர்ச்சியால் ஊக்கம் பெற்று முன்னணி தோழர்கள், மயிலாடுதுறை மாவட்டக்குழு உறுப்பினர்கள் மாவட்டச் செயலாளர் குணசேகரன் தலைமையில் தியாகிகள் சுடரேந்தி பயணத்தைத் தொடங்கினர். சீர்காழி, மயிலாடுதுறை, குத்தாலம் பேரூர்கள் வழியாக மக்கள் சந்திப்பு பரப்புரை நிகழ்ச்சிகளை நடத்தி மணலூர் (திருப்பனந்தாள் ஒன்றியம்) தோழர்கள் சந்திரகுமார்-சந்திரசேகர் நினைவிடம் வந்து சேர்ந்தனர். ஊர்மக்கள் கட்சி ஊழியர்கள் திரண்டிருந்த நினைவிடத்தில் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் வீ சங்கர் கட்சிக் கொடியேற்றி வைத்தார். மணலூர் கிளைச் செயலாளர் தங்கசாமி, தஞ்சை மாவட்டச் செயலாளர் டி. கண்ணய்யன், மாநிலக் கமிட்டி உறுப்பினர்கள் மாசிலாமணி, தவச்செல்வம், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக மாநிலக் குழு உறுப்பினர் மாதவி, மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர். தோழர்கள் குணசேகரன், பாலசுந்தரம் அஞ்சலி உரையாற்றிய பின் பயணம் திருப்பனந்தாள் நோக்கி புறப்பட்டது. செங்கொடிகள் ஒளிர்ந்த இருசக்கர வாகனங்கள் அணிவகுத்துச் செல்ல வழிநெடுக பரப்புரை முழக்கங்களுடன் திருப்பனந்தாள் நகரை சென்றடைந்தது. நன்கு அலங்கரிக்கப் பட்டிருந்த மேடையில், அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் சங்கர், மாநிலச் செயலாளர் ஆசைத்தம்பி உள்ளிட்ட தலைவர்கள் புரட்சிகர முழக்கங்களுக்கிடையே தியாகிகள் சுடரைப் பெற்றுக் கொண்டனர். கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர், விடுதலை சிறுத்தைகள் மாவட்ட பொறுப்பாளர், மக்கள் அதிகாரம் பொறுப்பாளர் ராவணன் உள்ளிட்டோர் உரையாற்றினர். தோழர் சந்திரகுமார்-சந்திரசேகர் போராட்ட வாழ்வை உணர்ச்சி பூர்வமாக மாநிலச் செயலாளர் ஆசைத் தம்பி எடுத்துக் கூற அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் சங்கர் மோடி ஆட்சி வெளியேற்றப் பட எதிர்க்கட்சிகளின் "இந்தியா" கூட்டணியை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்.

அங்கிருந்து அடுத்த நாள் பயணம் தொடர்ந்தது. திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம் ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகள், கும்பகோணம் நகரம் உள்ளிட்டப் பகுதிகளில் 20க்கும் மேற்பட்ட தோழர்கள் அணிவகுத்த பரப்புரை பயணம் செப்டம்பர் 3,4,5 தேதிகள் முழுவதும் மேற்கொண்டது. செப்டம்பர் 6 அன்று கபிஸ்தலத்தில் நடைபெற்ற அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக தஞ்சை மாவட்ட முதல் மாநாட்டை பயணக் குழு வாழ்த்தியது. 11 பேர் கொண்ட மாவட்டக் குழுவையும் தலைவராக தோழர் சசிகலாவையும் செயலாளராக தோழர் விஜயாளையும் தேர்ந்தெடுத்த மாநாடு பரப்புரை பயணத்துக்கு வரவேற்பளித்தது.

மாவட்டத்தில் உள்ள 4 ஒன்றியங்களில் உள்ள பல பத்து ஊராட்சிகளில், நகர்ப்புர பகுதிகளில் நடைபெற்ற பரப்புரை நிகழ்ச்சிகளில் கட்சி, அவிகிதொச மாவட்ட தலைவர்கள், முன்னணி ஊழியர்கள், மாநிலக் கமிட்டி உறுப்பினர்கள், கும்பகோணம் மாநகரச் செயலாளர் மதியழகன், மாநிலச் செயலாளர் ஆசைத்தம்பி ஆகியோர் கலந்துகொண்டு பேசினர்.

தேசிய ஊரக வேலைத் திட்டத்தில் மோடி அரசின் சீர்குலைவு செயல், பாஜக எதிர்ப்பு அரசியல் கருத்துகள் மக்களை வெகுவாக ஈர்த்தன.

செப்டம்பர் 7 அன்று, பயணம் திருச்சியை அடைந்தது. மணப்பாறை, வையம்பட்டி பகுதிகளில் பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. திருச்சி மாவட்டச் செயலாளர் தேசிகன், மாநிலக் கமிட்டி உறுப்பினர் ராஜ்குமார், அவிகிதொச பொறுப்பாளர் கருப்பையா, மணப்பாறை நகரச் செயலாளர் பாலு, மாவட்டக்குழு உறுப்பினர்கள் மாசிலாமணி, தங்கராஜ், இளையராஜா, மாநிலச் செயலாளர் ஆசைத்தம்பி, ராமாயி உள்ளிட்டோர் பரப்புரையில் பங்கு பெற்றனர்.

செப்டம்பர் 8 அன்று புதுக்கோட்டை மாவட்டம் கீரனூரில் பயணம் தொடங்கியது. லக்கணாப்பட்டியில் கொடியேற்றத்துடன் துவங்கிய நிகழ்ச்சி, கீரனூர் காந்தி சிலை அருகே பரப்புரையை துவக் கியது. கட்சி புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் வளத்தான், குன்றாண்டார் கோவில் ஒன்றியச் செயலாளர் சத்தியமூர்த்தி, பெண்கள் கழக மாவட்டத் தலைவர் ராஜலட்சுமி, பாலதண்டாயுதம், மாவட்டக் குழு உறுப்பினர் சின்னத்துரை உள்ளிட்டோர் பயணத்தில் கலந்து கொண்டனர். குன்றாண்டார் கோவில் அண்டக்குளம் வழியிலுள்ள பல சிற்றூர், பேரூர்களில் பரப்புரை செய்து, 'பயணம்' மாலை ஆலங்குடியை சென்றடைந்தது. ஆலங்குடி கடைத்தெருவில் பெண்கள் கழகத்தின் முதல் மாநாடு சார்பில் பயணத்துக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. 100 க்கு மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்ட பெண்கள் மாநாடு, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டக்குழு, மாவட்ட தலைவர் ராஜலட்சுமி, செயலாளர் மணிமேகலை, மாநிலக்குழு உறுப்பினர் கிருஷ்ணவேணி, மாநில அமைப்பாளர் ரேவதி உள்ளிட்ட தோழர்களால் வரவேற்பளிக்கப்பட்டது. மாநாட்டை வாழ்த்தி மாவட்டக்குழு உறுப்பினர் பாஸ்கர், மாவட்டச்





செயலாளர் வளத்தான், பாலசுந்தரம் ஆகியோர் மாநாட்டு வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்து பேசினர். செப் 9 அன்று கறம்பக்குடி ஒன்றியப் பகுதியிலுள்ள ஊராட்சி, நகர்ப்புரப் பகுதிகளில் பரப்புரை பயணம் மக்களை சந்தித்தது. மாநிலக் கமிட்டி உறுப்பினர் ரங்கசாமி, மாவட்டக் கமிட்டி உறுப்பினர்கள் விஜயன்,மாதவன், ராஜரத்தினம், ஒன்றியக் கமிட்டி தோழர்கள் மதி, புஷ்பராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 10ம் தேதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில் பயணம் மேற்கொண்டது. மாவட்டக் கமிட்டி உறுப்பினர்கள் சின்னதுரை, புண்ணியமூர்த்தி, கோவிந்தராஜ், பெரமயன், தங்கராஜ்,சிவராஜ் மேலும் ஒன்றியக் கமிட்டி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பல இடங்களில் பொதுமக்கள் ஆர்வத்துடன் நிதியளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மூன்று நாட்கள் பரப்புரை பயணத்தில் தொடர்ச்சியாக கலந்து கொண்ட சின்னதுரை சிறிய விபத்தொன்றுக்கு ஆளாகி பயணத்தில் தொடரமுடியாமலாகிவிட்டது. 11 தேதி அறந்தாங்கி, ஆவுடையார்கோவில் ஒன்றியப் பகுதிகளில் பயணக் குழு பயணம் செய்தது. மாவட்டக் கமிட்டி உறுப்பினர்கள் ஜீவா, மதிமுருகன் இவர்களோடு கட்சியின் கடலூர் மாவட்டச் செயலாளர் ராஜசங்கர், பாலமுருகன், வீரப்பன் இன்னும் பல தோழர்கள் கலந்து கொண்டனர். மாவட்டம் முழுவதும் ஆறு ஒன்றியங்களில் நடைபெற்ற பரப்புரை பயணத்தை மாவட்டச் செயலாளர் வளத்தான் வழி நடத்தினார்.

தோழர் சுப்பு நினைவு நாளான செப்டம்பர் 13 அன்று காலை அவருடைய சமாதிக்கு அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் சங்கர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் பால சுந்தரம், ஆசைத்தம்பி, பாலசுப்பிரமணியன், மாநில நிலைக் குழு உறுப்பினர்கள் சிம்சன், ஞானதேசிகன், மாநிலக் குழு உறுப்பினர்கள் குணசேகரன், நாராயணன் உள்ளிட்ட பலரும் அஞ்சலி செலுத்தினர். கட்சியின் மாவட்டச் செயலாளர் தோழர் சிம்சன் உறுதி

மொழியை வாசிக்க, தோழர்கள் பாசிச பாஜகவை ஆட்சியிலிருந்து வெளியேற்ற உறுதி ஏற்றுக் கொண்டனர். தோழர் சுப்புவின் இல்லத்திற்குச் சென்று அவர் துணைவியார் காளியம்மாளையும் மகள் ராதிகாவையும் சந்தித்தனர்.

அன்று மாலை தேவகோட்டையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கிட்டத்தட்ட 30 வருடங்களுக்கு பிறகு சிபிஐஎம்எல் பொதுக் கூட்டத்திற்கு காவல்துறை அனுமதி அளித் திருந்தது. பல்வேறு கிராமங்களிலிருந்து குறிப்பாக பெரும் எண்ணிக்கையில் பெண்கள் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு மாநிலக் குழு உறுப்பினர் நாராயணன் தலைமை வகித்தார். கூட்டத்தில் இகக(மாலெ) சிவகங்கை மாவட்டச் செயலாளர் சிம்சன், மாநிலச் செயலாளர் ஆசைத் தம்பி, அரசியல் தலைமை குழு உறுப்பினர் சங்கர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலாளர் இளைய கௌதமன், பேராசிரியர் கோச்சடை, மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் பேராசிரியர் அரச முருகபாண்டியன், தமிழ்த் தேச மக்கள் முன்னணியின் தலைவர் மீ.த.பாண்டியன், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் சந்தன மேரி, உழைக்கும் விவசாயிகள் சங்க பொறுப்பாளர் எஸ்.பி. துரைராஜ், அயர்லா மாநில பொதுச் செயலாளர் தோழர் குணசேகரன், ஏஐசிசிடியு மாநில பொதுச் செயலாளர் ஞான தேசிகன் ஆகியோர் உரையாற்றினர். மத்திய கமிட்டி உறுப்பினர்கள் பாலசுந்தரம், பாலசுப்ரமணியம், புதுக்கோட்டை மாவட்ட செயலாளர் வளர்த்தான் உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டனர். தீர்மானத்தை புரட்சிகர இளைஞர் கழகத்தின் ரஞ்சித் முன்வைத்தார். புஇக ராமச்சந்திரன் நன்றி கூறினார். கூட்டத்தில் பேசிய பலரும் சனாதனத்தையும் சாதியாதிக்கத்தையும் கண்டனம் செய்தனர். அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் சங்கர், ஒரே நாடு ஒரே தேர்தல் என்று சொல்பவர்கள் நாட்டில் அனைத்து மக்களுக்கும் ஒரே கூலி தருவார்களா? என்று கேள்வி எழுப்பினார். மக்களுக்காக குப்பைத்தொட்டி தேவை என்ற பிரச்சினையில் கூட நாம் போராடலாம். ஆனால் உழைக்கும் மக்களின் அதிகாரம் என்பது தான் சிபிஐ எம்எல் கட்சியின் முக்கிய இலக்காக இருக்கும் என்றார்.









பாஜகவுக்கு செல்வாக்கு ஏற்படுத்தும் முயற்சியாக அண்ணாமலை நடத்திய பயணம் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாத நிலையில், ஜனநாயகம் காக்க, இந்தியாவைக் காக்க மோடி ஆட்சி வெளியேற்றப்பட வேண்டுமென்ற முழக்கத்துடன் நடைபெற்ற இகக(மாலெ), அவிகிதொச பரப்புரை பயணத்தை மக்கள் வெகுவாக ஆதரித்தனர். பாஜக எதிர்ப்பு மக்கள் மத்தியில் வலுவாக இருப்பதை பரப்புரை பயணம் உணர்த்திய அரசியல் பயணமாக அமைந்தது. அமைப்பு ரீதியான அணிதிரட்டலில் உள்ள ஏற்றத் தாழ்வுகளையும் பயணம் சுட்டிக்காட்டியுள்ளது. ❑

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்)

நடத்திய

# மணிப்பூர் கொடூரங்களை மன்னிக்க மாட்டோம்! மோடி ஆட்சியை விரட்டும் வரை ஓயமாட்டோம்!!

## சிறப்பு மாநாடு



*2023 செப். 15, மாலையில் நாகர்கோவில் சிவகாமி அம்மாள் கல்யாண மண்டபத்தில் இகக(மாலெ) சார்பில் "மணிப்பூர் கொடூரங்களை மன்னிக்க மாட்டோம்! மோடி ஆட்சியை விரட்டும் வரை ஓயமாட்டோம்!!" என்ற தலைப்பில் சிறப்பு மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு இகக(மாலெ) குமரி மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.அந்தோணிமுத்து தலைமை தாங்கினார். இகக(மாலெ) மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி, மத்தியக்குழு உறுப்பினர் பாலசுந்தரம், மாநில நிலைக்குழு உறுப்பினர் க.ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இகக(மாலெ) மாநில நிலைக்குழு உறுப்பினர் சுசீலா வரவேற்புரையாற்றினார்.*

*மாநாட்டில் இகக(மாலெ) அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் வீ.சங்கர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிறுவனத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு உறுப்பினர் மதுகூர் ராமலிங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளரும் தமிழ்நாடு சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான நா.பெரியசாமி, மக்கள் அதிகாரம் அமைப்பின் மாநிலப் பொருளாளர் காளியப்பன், மனிதநேய மக்கள் கட்சியின் மாநிலச் செயலாளர் பழனி பாரூக், இகக(மாலெ) மத்திய கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் கிருஷ்ணவேணி, ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் சங்கரபாண்டியன் உள்ளிட்ட தலைவர்கள் உரையாற்றினர். முன்னதாக, மக்கள் கலை இலக்கிய கழக தோழர் கோவன் தலைமை யிலான கலைக் குழுவினரின் புரட்சிகர பாடல் களுடன் மாநாடு துவங்கியது. இகக(மாலெ) மாநிலக்குழு உறுப்பினர் தோழர் கார்மல் நன்றி கூறினார். மாநாடு நடைபெற்ற வளாகத்திலும் மேடையிலும் மார்க்ஸ், லெனின், அம்பேத்கர், பெரியார் உள்ளிட்ட கட்சியின் தலைவர்கள், தியாகிகளின் படங்களும் மணிப்பூரின் கொடூரத்தை வெளிப் படுத்தும் படங்களும் மணிப்பூர் கொடூரத்தைக் கண்டித்து நடைபெற்ற போராட்டப் படங்களும் வைக்கப்பட்டு இருந்தன.*

*மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்*

- *கடந்த 5 மாதங்களாக,மணிப் பூரில் பழங்குடி மக்களுக்கு இடையிலான பிளவு, கொடூர வன்முறைகளை நிறுத்தி, அமைதி நிலை நாட்டப்பட ஏதுவாக உடனடியாக மணிப்பூர், பாஜக முதலமைச்சர் பைரன்சிங் பதவி விலக வேண்டும்!*
- *ஹரியானா மாநிலத்தில், பாஜக அரசால் திட்டமிடப்பட்டு இசுலாமியர்களுக்கு எதிராக*

நடத்தப்படும் வன்முறைகள் மற்றும் புல்டோசர் அடக்குமுறைகளில் ஈடுபட்ட குற்றவாளிகள் கைதுசெய்யப்பட வேண்டும். உயிர், உடமைகள் இழந்தவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டுமென மாநாடு கோருகிறது.

- பிறப்பால் மேலோர் கீழோர், புனிதம் தீட்டு, தீண்டாமை, சாதிய ஒடுக்குமுறைகள், பெண்ணடிமைத்தனம் ஆகியவற்றை வலியுறுத்தும் "சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும்!" என்ற தமிழ்நாடு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாக்கைப் பிடுங்க வேண்டும் என வன்மத்துடன் பேசிய மத்திய நீர்வளத்துறை அமைச்சர் கஜேந்திரசிங் செகாவத்தை கைது செய்ய வேண்டும், பதவிநீக்கம் செய்ய வேண்டுமென மாநாடு கோருகிறது.
- மோடி அரசாங்கம் கொண்டு வரத் துடிக்கும் "ஒரேநாடு ஒரேதேர்தல்" என்பது அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்பு, மாநிலங்களின் தன்னாட்சி, கூட்டாட்சிமுறை மீதான தாக்குதல் ஆகும். அது இந்திய சமூகத்தின் பன்முகத் தன்மையை அழித்துவிடும். இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியமே! இந்திய சமூகத்தின் பன்முகத் தன்மை மீதான தாக்குதலை எதிர்த்துப் போராடுவோம்! பாராளுமன்ற ஜனநாயகம், பலகட்சி ஆட்சி முறை, சுதந்திரமான நியாயமான தேர்தல் ஆகியவற்றை உயர்த்திப் பிடிக்க மாநாடு உறுதி ஏற்கிறது!
- பல இனங்கள், பல மொழிகள், வேறுபட்ட இறைநம்பிக்கைகள் கொண்ட பன்மைத்துவ இந்தியாவின் மீது, ஒருபொதுசிவில் சட்டத்தை திணிக்க காவிப்பாசிச மோடி அரசு முயற்சிப்பதை மாநாடு வன்மையாக எதிர்க்கிறது, கண்டிக்கிறது.
- இந்தியா எனும் பாரத் என்று அரசமைப்புச் சட்டம் குறிப்பிட்டுள்ள போதிலும் "பாரத் என மாற்ற வேண்டும்" என்ற ஆர்எஸ்எஸ் தலைவர் ஆலோசனைப்படி, மோடி அரசாங்கம் தற்போது பல்வேறு நிகழ்ச்சிகளிலும், 'பாரத்' என்ற பெயரை மட்டும் பயன்படுத்தத் துவங்கியுள்ளது. புராண இதிகாசங்களைக் காட்டி பாரத் என இந்திய நாட்டின் பெயரை மாற்றம் செய்ய வேண்டும் என்ற விவாதங்களுக்குப் பின்னால், வெறும் பெயர் மாற்றம் மட்டுமின்றி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றுவதற்கு மோடி அரசாங்கம் தயாராகி வரும் சதித்திட்டமும் வெளிப்படுகிறது. இதற்காக பாராளுமன்ற வழிமுறைகளை மீறும் பாசிச நடவடிக்கைகளில் மோடி அரசாங்கம் இறங்கியுள்ளதை முறியடிக்க மாநாடு உறுதி ஏற்கிறது!
- ஜனநாயகம் காக்க, இந்தியாவைக் காக்க, எதிர்வரும் மக்களவை தேர்தலில், கார்ப்பரேட் காவிப்பாசிச மோடி ஆட்சியை வெளியேற்ற' இந்தியா கூட்டணியை எல்லாவகையிலும் வலுப்படுத்திட முன்வருமாறு தமிழக மக்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ( மார்க்சிஸ்ட் -லெனினிஸ்ட்)ன் சிறப்பு மாநாடு அழைப்பு விடுக்கிறது. தொழிலாளர், கிராமப்புர தொழிலாளர், பெண்கள்,மாணவர், இளைஞர், முற்போக்கு, ஜனநாயக சக்திகளை மோடி ஆட்சிக்கு எதிராக அணிதிரட்ட மாநாடு உறுதி ஏற்கிறது.

இந்தியா ஒன்றுபடும், இந்தியா வெல்லும்



## தூய்மைப் பணியாளர்கள் கோரிக்கை ஆர்ப்பாட்டம்







*தூய்மை பணியாளர்களின் வேலை, கூலி, கௌரவம், அவுட்சோர்சிங் முறையை ஒழித்து கட்டுதல், அனைவரையும் பணி நிரந்தரம் செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக நாடு தழுவிய பிரச்சார இயக்கம் மற்றும் போராட்டத்தின் ஒரு பகுதியாக செப்டம்பர் 12 அன்று தமிழ்நாட்டில் கோவையில் டாடாபாத், சிவானந்தா காலனி ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஆர்ப்பாட்டத்திற்கு சந்தானம் தலைமை தாங்கினார். இகக (மாலெ) மாவட்டச் செயலாளர் பாலசுப்பிரமணியன், வெங்கடாசலம், பெரோஸ் பாபு, சங்கர் கண்டன உரையாற்றினார்கள். ஓட்டுநர் சங்க தலைவர் மருதமணி, பொருளாளர் ரங்கநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். சுரேஷ் நன்றி கூறினார். தென்காசியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத் தலைவர் வேல்முருகன் தலைமை தாங்கினார். ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் சங்கர பாண்டியன் துவக்கிவைத்துப் பேசினார். முத்து கிருஷ்ணன், தமிழரசி, கனகராஜ், முருகேஸ்வரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். வேலூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சிம்புதேவன் தலைமை தாங்கினார்.*

## சேலத்தில் கோரிக்கை ஆர்ப்பாட்டம்

*சேலம் மாவட்ட சிபிஐஎம்எல் அம்மாப்பேட்டை, குமரகிரிப் பேட்டை உள்ளூர் கமிட்டிகள் சார்பில், 04.09.23 அன்று சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தொழிலாளர்களின் வேலை, கூலி, சமூகப்பாதுகாப்பு, வீடு, வீட்டு மனைப்பட்டா, வாழ்வாதாரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர் ஜெயராமன் தலைமை தாங்கினார். இகக(மாலெ) மத்திய கமிட்டி உறுப்பினர் சந்திரமோகன், மாவட்ட செயலாளர் ஆர்.வேல்முருகன், பி.அன்பு, வி.பாலு, அ.வேல்முருகன், ஜி.சுந்தரராஜன், கே.நடராஜன் ஆகியோர் உரையாற்றினர்.*



# அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் மாவட்ட மாநாடுகள்




புதுக்கோட்டை



தஞ்சாவூர்




திருவண்ணாமலை

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.09.2023 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# இகக(மாலெ) சிறப்பு மாநாடு - 15.09.2023















Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh